நவமணி.

எல்லாம் தேவன் செயல்

உள்நாடு	வெளிநாடு
ரூ 1	ரூ 1½

ஆசிரியன் சி. ரா. ம இராமநாதன்

NAVAMANI.

(A High Class Tamil monthly)

PALLATUR, RAMNAD Dt. S. INDIA.

Vol. 2. பிரஜோ-ஸு சித்திரை, வைகாசி-மீ No 4. 5.

பொருளடக்கம்.

எண்.	விஷயம்	பக்கம்.
	மாலை-2. மணி-4.	
1.	கடவுள்வணக்கம்.	121
2.	வகுப்புக்கலவரம் (தலையங்கம்) பத்திராதிபர்.	123
3,	ஆந்திரநாடு:— திரு. சி. கு. நா. (முன்தொடர்ச்சி)	128
4.	வேட்டர்வேந்தன்:– மேலப்பெருமழை, சோமசுந்தரன் அவர்கள்.	132
5.	பழந்தமிழ் நாட்டின் பரப்பு:— பண்டிதர் அ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள்.	135
6.	நன்மாதிரிகை:— வரகவி திரு. சவரிநாதன் அவர்கள்.	138
7,	கம்பராமாயணக் கதிர்மணிக்கோவை:— நாரணன் நவில்வது.	140
8.	கனகவல்லி அல்லது கள்வர்கவர்ந்த கன்னிகை:— திரு. நா. அவர்கள்.	141
9.	காங்கிரஸ் தீர்மானம் (முன்தொடர்ச்சி)	145
10.	ஜப்பான் அல்லது ஆசியாகண்டத்தின் சிரோரத்னம்:— ஸ்ரீமான் ஜேம்ஸ் வரட் மொழிபெயர்ப்பு.	153
11.	செய்தித்திரட்டு.	157
12.	மணியொளி (குறிப்பு) பத்திராதிபர்.	159
	அநுபந்தம் பகவான் ரமணமகர்ஷிகள் படம்.	
	மாலை-2 மணி-5.	
1.	கடவுள்வணக்கம்.	161
2.	அறிவிப்பு மானேஜர் 'நவமணி' பத்திரிகாலயம்.	162
3.	ராஜிக்குப்பின்னர் (தலையங்கம்) பத்திராதிபர்.	163
4.	பர்மாவில் இந்தியர் (உபதலையங்கம்) பத்திராதிபர்.	167
5.	பெண்:— பண்டிதை அசலாம்பிகை அம்மாளவர்கள் முன்தொடர்ச்சி.	171
6.	வயலூர்:— பழநி. திரு. நடராஜமுதலியார் அவர்கள்	173
7.	பன்னிருசெல்வர்கள்:— பாற்கடலோன் தொகுத்தது.	176
8.	34-வது தமிழ்மாகாண மஹாநாட்டுத் தீர்மானங்கள்.	177
9.	இன்சொல்:— ஸ்ரீ. ப. வா. சாமிநாதமுலியார் அவர்கள்.	183
10.	தலைவிதி:— டர்பன் சரஸ்வதி சபைத்தலைவர் ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள்.	186
11.	மஹாத்மாகாந்தி:— திரு. சி. எஸ். கணபதி அவர்கள்.	189
12.	நாற்றிசை நடப்பு.	193
13.	விகடத்துணுக்குகள்.	197
14.	மணியொளி (குறிப்பு) பத்திராதிபர்.	198

22 DEC 1931

நவமணி.

உள்நாடு ரூ 1

வெளிநாடு ரூ 1½

ஆசிரியன் சி.ரா.ம இராமநாதன்

NAVAMANI.

(A High Class Tamil monthly)

PALLATUR, RAMNAD Dt. S. INDIA.

Vol. 2. பிரஜோற்பத்தி-வூ கார்த்திகை-மீ No 11.

பொருளடக்கம்.

எண்.	விஷயம்.	பக்கம்.
1.	கடவுள்வணக்கம்.	401
2.	அறிவிப்பு.	402
3.	பத்திரிகைத் தொழில் (தலையங்கம்) பத்திராதிபர்.	403
4.	ஜெகஜ்ஜோதி (அல்லது) கற்பின் அணிகலம். திரிசிரபுரம் வரகநகர் வரகவி, திரு. சவரிநாதன் B. A.	409
5.	கல்வி என்பது யாது? தென் ஆப்பிரிக்கா டர்பன் சரஸ்வதி சபைத்தலைவர் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை.	415
6.	மாதர் கல்வி. டாக்டர் முத்துலக்ஷிமி அம்மா அவர்கள்.	423
7.	காங்கிரசுக்கு முன் நான் மிக அற்பன். மகாநாட்டில் மகாத்மாவின் வீரமொழிகள்.	427
8.	விகடத்துணுக்குகள்.	432
9.	மணியொளி. (குறிப்பு பத்திராதிபர்.)	435
10.	நாற்றிசை நடப்பு.	437

அறிஞர்களே!

நமது 'நவமணி'க்கு அடுத்தமாதத்தோடு இரண்டாவது ஆண்டு முடியப்பெறும். அன்பர்கள் இக்குழந்தையின் மூன்றும் வருஷத்திலும் அன்புடன் முன்போல உபசரிக்க வேண்டுகிறோம். இக்குழந்தை தன் மூன்றும் பிராயத்தில், அநேக பக்கங்களோடு அரிய விஷயங்களைத் தன்னுள் அடக்கி, நேயர்களே! உங்கள் ஆதரவைப்பெற முயலுகின்றது. குழந்தையை எடுத்தாளுங்கள்.

மானேஜர்,

"நவமணி" பத்திரிகாலயம்

பள்ளத்தூர்.

கடவுள் வணக்கம்.

தந்த தந்தன தந்தன் தந்தன
தந்த தந்தன தந்தன தந்தன
தந்த தந்தன தந்தன தந்தன தந்ததான.

மஞ்செ னுங்குழ லும்பிறை அம்புரு
வங்க ளென்சிலை யுங்கணை ஆங்கயல்
வண்டு புண்டரி கங்களை யும்பழி சிந்துபார்வை
மண்ட லஞ்சுழ லுஞ்செவி அங்குழை
தங்க வெண்டா ளம்பதி யும்பலு
மண்ட லந்திக ழுங்கமு கஞ்சிறு கண்டமாதர்
கஞ்சு கங்குர லுங்கழை அம்புய
கொங்கை செங்கிரி யும்பவ ளம்பொறி
கந்த சந்தன மும்பொலி யுந்துகில் வஞ்சிசேருங்
கஞ்ச மண்டுளி னின்றிர சம்புகு
கண்ப டர்ந்திட ரம்பையெ னுந்துடை
கண்கை அஞ்சர ணஞ்செயல் வஞ்சலை நம்புவேனே
கஞ்ச கஞ்சக ணஞ்சக டுண்டுடு
டுண்டு டிண்டிமி டண்டம டுண்டுடு
தந்த னந்தன திந்திமி சங்குகள் பொங்குதாரை
சம்பு வின்கும ரன்புல வன்பொரு
கந்த னென்றிடு துந்துமி யுந்துவ
சங்க ளங்கொளி ருங்குடை யுந்திசை விஞ்சவேகண்
டஞ்ச வஞ்சசு ரன்திர ளுங்குவ
டன்ற டங்கலும் வெந்துபொ ரிந்திட
அண்ட ரிந்திர னுஞ்சர ணம்புக வென்றவேளே
அம்பு யந்தண ரம்பைகு றிஞ்சியின்
மங்கை அங்குடில் மங்கையொ டன்புடன்
அண்ட ருங்கொழு செந்திலி லின்புறு தம்பிரானே.

அறிவிப்பு.

அறிஞர்களே!

நமது "நவமணி" யின் அபிவிர்த்திகோறி "நவமணி" ஆசிரியர் திருவாளர் சி. ராம. இராமனுதன் அவர்கள் பழைய சந்தாதாரர்களைக் காணவும் புதிய உதவியாளர்களைத் தேடவும் தமிழ்நாட்டின் சில பாகங்கள் சென்ற பின்னர் மலேயா சென்றுள்ளார்கள். அவ்விடம் பழைய சந்தாதார்கள் புதிய வருடச் சந்தாவைச் செலுத்துவதோடு நமது ஆசிரியரவர்களுக்கு எவ்வகையில் உதவியளிக்க முடியுமோ அவ்வகையில் தகுந்த உதவியளித்து "நவமணி" மென்மேலும் சிறப்புற்று வாழ உதவியளிக்க வேண்டுகிறோம். பத்திரிகையின் சந்தா மிக மிகக் குறைவாகையாலும் ஆண்டுகள்தோறும் அவ்விடம் வந்து வசூல் செய்தல் இயலாதாகையாலும், ஆயுட் சந்தாக்களாகவே சந்தாதார்கள் உதவியளித்தலே சிறந்த உதவியாகும் எனவே, தகுந்த ஆதரவுகொடுக்கச் செய்யவேண்டுகிறோம்.

மானேஜர்,

நவமணி பத்திரிகாலயம்.

பள்ளத்தூர்.

22 DEC 193

உ

எல்லாம் தெய்வச்செயல.

'நவமணி;'

பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே. பாரதியார்
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. திருவள்ளுவர்

மாலை 2. } பள்ளத்தூர் பிரஜோற்ப, கார்த்திகை { மணி 11.

பத்திரிகைத் தொழில்.

உலகத்திலே நாம் காணுந் தொழில்கள் யாவற்றினுள்ளும் சிறந்ததும்சிரமமுள்ளதும் பத்திரிகைத்தொழில்என்பது அவ்வுலகில் பழக்கங்கொண்டார் யாவரும் மறுக்காது ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயமாகும்.பத்திரிகைத் தொழிற்கு எவ்வளவுமூலதனமிருந்தாலும் போதாது. பத்திரிகையை நடத்துவோர் மிகுந்த சுறுசுறுப்புள்ளவராயும் சதா அதன் அபிவிர்த்தியிலேயே கண்ணுங் கருத்துஞ் செலுத்துபவராயும் சமரசநோக்குள்ளவராயும் இருந்தால் தான் பத்திரிகையைச் செழிப்பாக நடத்தமுடியும். சமரச நோக்கமில்லாமல் ஒருதுறைப் பத்திரிகையாக விளங்குமேயானல் அந்நோக்கமுள்ள குழுவினர் மாற்றமடைந்து கக்ஷி பலவீனமடையும்பொழுது அக்கக்ஷியைத் தாங்கிய பத்திரிகை பலங்குறைவு பெற்று ஒன்று, மற்ற கக்ஷியைத் தழுவ நேரிடும்; அல்லது வீழ்ச்சி பெறும். அதனல் ஒரு கக்ஷியைத் தாங்கிப் பின்னர் ஆதரவு குறைவுபட்டு மற்றொரு கக்ஷியைத் தழுவுதலும் குணப்படாது.

பணம் சம்பாதிப்பதையே நோக்கமாகக்கொண்டு தான் ஒரு கக்ஷியும் பத்திரிகை ஒருகக்ஷியுமாக இருத்தலும் கூடாது. கூடுமானவரை தனது அபிப்பிராயத்தைப் பொதுமக்களிடையே நியாயமாகவும் தகுந்தசான்றுகளுடனும் சமரசநோக்கிலிருந்து விளக்கமாக எழுதவேண்டும். மக்களில் பெரும்பாலோர் அதை ஒப்புக்கொள்வார்களேயானல் நாமும் அவ்வழியிலேயே சேரலாம். இல்லையேல் நமது அபிப்பிராயத்தை ஜனங்கள் தழுவாமலிருப்பதற்குள்ள குறையைக் கண்டு நிவர்த்தித்துத் தகுந்த வழியில் நடத்தலே சாலச்சிறந்ததாகும். ஒரு துறை நோக்கோடு செல்லாமல் பரந்த எண்ணத்தோடும் சமரச நோக்கோடுஞ் செல்லும் பத்திராதிபர்களுக்கு எங்கும் தகுந்த இடங்கிடைக்கும்.

ஒரு பத்திரிகை முன்னுக்கு வரவேண்டுமானல் அது அதை ஆதரிக்கும் சந்தாதார்களைப் பொறுத்ததாகவே தான் இருக்கிறது. சந்தாதார்களும் விளம்பரக்காரர்களும் ஒரு பத்திரிகைக்கு எவ்வளவு ஆதரவு நல்குகிறார்களோ அவ்வளவு ஊக்கமும் ஒழுங்காக வேலைசெய்ய மனத்தளர்ச்சியின்மையும் அப்பத்திரிகாசிரியர்க் கேற்படும். அதனல் பத்திரிகை விருத்திமார்க்கத்தில் வேலைசெய்யும் சந்தாதார்களும் விளம்பரக்காரர்களும் அதனல் பெரும்பயனடையும் ஏதுவுண்டாகும். இதில் விளம்பரஞ்சேகரிக்கவும் சந்தாசேர்க்கவும் பத்திரிகைச் சொந்தக்காரர்களுக்கும் சந்தாதார்களுக்கும் தரகர் இல்லாமல் வேலைகள் நடைபெறுமானல் பெரும் பயனுண்டு. அவ்வாறின்றி மத்தியில் ஏஜண்டுகள் நியமிப்பதால் உண்டாகும் பணவிரயமும் ஏஜண்டுகளால் உண்டாகும் வீண்மோசங்களும் கணக்கிலடங்காதன. எல்லா ஏஜண்டுகளும் அவ்வாறிருக்கமாட்டார்களாயினும் பொதுவாக ஏஜண்டு நியமிக்கும் முறையால் சந்தாவசூலில் ரூபாய்க்கு ஆறணு முதல் எட்டணுவரையுங்கூட சில காலங்களில் செலவாகிவிடுகிறது. பல ஏஜண்டுகள் நியமிப்பதில் 100-க்கு 98 பேர் ஒழுங்காயிருந்து இரண்டுபேர் கெடுதல் எண்ணம் படைத்துவிட்டாலும் பத்திரிகாலயங்களில் 98 நல்ல ஏஜண்டுகளும் தேடித்தந்த பெரும் உதவி அவ்விருபேர்களுடைய மோசத்தில் அமிழ்ந்து கெடுதல்நிலை அடைகிறது. அதனல் கூடுமானவரை ஏஜண்டுகள் உதவியில்லாமல் நேராகச் சந்தாதார்

களுக்கும் பத்திரிகைச் சொந்தக்காரர்களுக்கும் மத்தியில் சம்மந்தம் பெற்று நிறையச் சந்தாதார்களைப்பெற்றுள்ள பத்திரிகைகளே தமது வாழ்க்கையில் ஜயமடையமுடியும்.

அடுத்துப் பத்திரிகை உலகை ஆத்ரிப்பவர்கள் கட்டுரையாளர்கள் என்பதை நாம் எடுத்துக்காட்டுவதில்லை. ஒவ்வோர் பத்திரிகைக்கும் விஷயதானம் புறிவோர் கைம்மாறு பெற்றோ கைமாறு பெறாமல் கௌரவமாகவோ எவ்வகையில் கொடுத்தாலும் அப் பத்திரிகையின் உயர்நிலைமையை நாடியே அதற்கு விஷயதானம் செய்யவேண்டுமே யல்லாமல், ஒரு ருசியான கட்டுரையை மக்களுக்கு வழங்கிப் பத்திரிகையின் வாசகர்கள் மனம் அதில் பதிந்துள்ளபொழுது அதை மத்தியில் நிறுத்திக்கொண்டு தன் தொப்பையை நிறப்பினால் தான் கட்டுரையைத் தொடர்ந்தனுப்ப முடியும் எனப் பெரும் வழக்குப் பேசியும் அதற்கென அக்காலங்ளில் மட்டிலாத் தொகைபெற்றும் பத்திரிகாசிரியர்களுக்குத் தொந்தரவு கொடுக்கிற பல கட்டுரையாளர்களால் நஷ்டமடையும் பத்திரிகைகளும், கஷ்டப்படும் பத்திராதிபர்களும், நிறைய உண்டு. நம் தமிழ்நாட்டில், இதுவும் பத்திரிகை நடத்துவோரின் துரதிர்ஷ்டகாரியங்களில் ஒன்றாகும். இது விஷயதத்தில் பத்திரிகைத் தொழிலி லீடுபடுவோர் முன்னெச்சரிக்கையாக இருக்கவேண்டுவதவசியம். கௌரவம் வாய்ந்த கட்டுரையாளர்கள் இவ்வாறு ஒருபொழுதும் செய்யமாட்டார்கள். இது விஷயத்தில் பத்திரிகைச் சொந்தக்காரர்கள் சாஸ்வதமான ஒருவரிருவரை போதிய ஊதியங் கொடுத்துத் தன்னிடத்தே வைத்துக்கொண்டு மீதிக்குத் தான் பிறரை எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. இந்த நிலைமையில் விஷயதானஞ் செய்வோர்கள் ஆதரவும் செவ்விய முறையில் பத்திரிகை உலகம் பெறவேண்டியதாக விருக்கிறது.

மற்றும் பத்திரிகைத் தொழிலி லீடுபட்டுள்ளோர் சொந்த அச்சுக்கூடமாக விருந்தால் அச்சுக்கூடத் தொழிலாளர்களையும் வாடகை அச்சுக்கூடமாகவிருந்தால் அதன் தொழிலாளர், முதலாளிகளையும் சமரசமாகவும் சந்தோஷமாகவும் நடத்திக்கொண்டு போகவேண்டும். இவர்கள்கூடக் காலந்தள்ளுவது தான் யாவற்றி

னுள்ளும் சிரமமான விஷயம். பெரும்பாலும் அச்சுக்கூடங்களில் கம்பாசிட்டர்களாகவும் மெஷின்மென்,பிரஸ்மென்களாகவும் அமர்வோர்களில் 100-க்கு 90 பேர் கல்வியறிவு நிறம்பப்பெருதவர்களாகவும் 100-க்கு 99 பேர் மிக ஏழைகளாகவும் 100-க்கு 85 பேர்கள் நல்லநடையில்லாதவர்களாகவுமே அமைகிறூர்கள். இதனுல் இவர்கள்கூடக் காலந்தள்ளிப் பத்திரிகை வேலையைச் செம்மையாக நடத்திக் குறித்தகாலத்தில் பத்திரிகையை வெளியிடுவதே பெருங் கஷ்டமான தொழில். இதிலிருந்து தப்பி ஒழுங்கான நிர்வாக சக்திபடைத்து அவர்களுடன் எப்பொழும் அன்பும் உற்சாகமாகவுமிருந்து அவர்கள் தேவையையும் பூர்த்திசெய்து பத்திரிகையைச் செம்மையாக முடித்துக் குறித்தகாலத்தில் பத்திரிகை வெளிவரச் செய்வதில் ஒவ்வோர் பத்திரிகைக்காரர்களும் அளவிறந்த சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இத்தனையையும் தாண்டிப் பத்திரிகையை உறுப்படுத்தி வெளியிடுவதில் எல்லோரையும்விட கவர்ன்மெண்டாரின் உதவியே மிகச் சிறப்பாகப் பத்திரிகைச் சொந்தக்காரர்களும் பத்திரிகாசிரியர்களும், அச்சிடுவோர், வெளியிடுவோரும் பெற வேண்டியதாக விருக்கிறது. அதுவும் இப்பொழுது பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் உண்மையில் நல்லெண்ணம் படைத்தவர்களாகவும் நியாயபுத்தியில் வாழும் கருத்துடையவர்களாகவுமிருப்பார்களே யானுல் அவர்கள் அரசாங்கத்தாரை இன்று திருப்திப்படுத்தி நல்ல பெயருடன் பத்திரிகையை நடத்திச் செல்லமுடியாது. ஓர் பத்திராதிபர் நேரிய முறையில் உள்ளதை உள்ளபடி எடுத்துரைப்பாரேயானுல் அதற்குச் சட்டம் இடந்தராது. தவறு கண்டு அபிப்பிராயங்கொடுக்கப் பத்திரிகைக்காரர்களுக்குச் சுதந்தரமில்லை. பத்திரிகையில் விஷயம் எழுதும்பொழுதே பத்திரிகாசிரியர்கள் உண்மையும் பொதுஜனங்களுக்கு அறிவிக்க விரும்பவேண்டும். அதை கவர்ன்மெண்டாரின் சட்டங்களிடையே அகப்பட்டுக்கொள்ளும் தன்மையில் எழுதப்படாமலுமிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். மீறித் தவறுதலாகவோ உள்ளதை உள்ளபடி எடுத்துறைக்கு முறையிலோ கவர்ன்மெண்டாரின் கண்காணிப்பில் பத்திராதிபரோ அகப்பிட்டுவிடுவா

ரேயானல் அப்பொழுது அவர் எழுதமுடியாத கஷ்டங்களுக்கு ஆளாவதோடு பத்திரிகைக்கும் ஆபத்தைத் தேடிக்கொண்டவ ராக முடியும். எனவே, பத்திரிகைத் தொழிலி லீடுபட்டோர் மேலே கண்ட எல்லோருடைய திருப்தியையும் பெற்றுவிட்ட போதிலும் கவன்மெண்டார் நம்மை எப்பொழுதும் நல்ல பிள்ளை கள் என்றே சொல்லும் நிலைமையில் நடந்துகொள்ளவேண்டும். இத்தனை சாதனைகளையும் திருப்தியாகவும் ஒழுங்குமுறையுடனும் பெற்றுவாழும் பத்திரிகைத்தொழில் நடத்தும் ஸ்தாபனங் களே, க்ஷேமமாகவும் நன்னிலையிலும் வாழமுடியும்.

இப்பொழுது அரசியல் உலகம் உள்ள நிலைமையில் இத்தனை நன்மைகளும் பெற்றுவாழும் பத்திரிகாலயங்கள் நமது இந்திய நாட்டில் மிகமிகக் குறைவு. இப்பொழுது கவர்ன்மெண்டார்கள் ஏற்படுத்தியிருக்கும் புதியவரிகளும் பத்திரிகாலயங்களையே பாதிக் கின்றன. இறக்குமதி வரி ஜாஸ்தி செய்திருப்பதால் அச்செழுத் துக்கள், யந்திரங்கள் மை, பேப்பர் விலைகள் கூடிவிட்டன. தபால் கட்டணங்களின் உயர்வால் பெரும் நஷ்டமடைய ஏதுவாகியுள்ள தும் பத்திரிகாலயங்களே, இவ்வளவு சிரமங்களையும் பொருமை யாகத் தாண்டி வெளிவரும் பத்திரிகைகளை ஆதரிக்கும் நாடே சிறந்தநாடாக விருக்கமுடியும். ஒருமனிதன் செய்யுந் தர்மங்களில் பத்திரிகைத் தொழிலுக்கு ஆதரவு நல்குவதையும் சிறந்த ஓர் தர்மமாகவே கொள்ளவேண்டும். ஓர் பத்திரிகையை ஆதரித்து அதற்கொருவன் பெருந் தொகை நன்கொடையளிப்பதால் அவன் பெரும் பயனடைய வழிகோலியவனுகவே விளங்குவான் என்ப தற்கு யாதொரு தடையுமில்லை. ஒரு பத்திரிகை சமரசநோக்கில் நன்ருக நடக்குமானல் அதனல் கல்வி ஞானம் பெறுவோரும் உலகியல் அறிவோரும் அநேகராகையால், அநேகருக்கு இப் பெரும் அறிவுப் பொக்கிஷத்தைத் திறக்கக் காரணமான பத்திரி கை என்ற திறவுகோலை அளிக்கும் ஆதவுர நல்கியவர்களே உல கில் எல்லா தர்மங்களினுள்ளும் தலையாய தான தர்மங்களைச் செய்தவர்களாவார்கள். இவ்வகையில் பொதுஜனங்களின் ஆதர வைப் பத்திரிகைத் தொழிலி லீடுபட்டோர் தேடவேண்டுவதும் பத்திரிகைகளுக்குப் பொதுஜனங்கள் உதவியளிக்க வேண்டுவதும்

ஒவ்வோர் நாட்டின் முன்னேற்றத்திற்கும் முக்கிய வேலையாகவே இருக்கவேண்டும்.

இத்துறையில் கடந்த ஏழு ஆண்டுகளாகப் பெருங்கஷ்டப் பட்டுப் பத்திரிகைத்தொழிலை நடத்திவருகிறோம். இதனால் சிரம முற்று மத்தியில் ஓர் பத்திரிகையை விட்டுவிட நேர்ந்தது. ஆயினும் மன ஊக்கத்தால் மீண்டும் அத்தொழிலிலேயே புகுந்து கடந்த இரண்டு ஆண்டுகளாக நம் நவமணி மூலம் இத்தொழிலை நடத்திவருகிறோமென்பது நமது வாசகர்களுக்கு நன்கு தெரிந்த விஷயம். எப்பொழுதும் பத்திரிகையால் எவரும் பெரும் சம்பாத்தியம் பெற்றுப் பொருள்திரட்டமுடியாதென்பதை நாம் நன்கறிவோம். ஆயினும், தமிழ்நாடு ஏனைய நாட்டைவிட பத்திரிகை உலகில் பின்னடைந்துள்ள நாடாகையாலும் பத்திரிகைத்தொழிலி லீடுபட்டார்க்குப் பின்னர் சிறப்புறினும், இப்பொழுது சிரமம் அதிகமாகையால் பொதுஜனங்கள் எவ்வெவ்வகையில் பங்கெடுத்துப் பத்திரிகைத் தொழிலாளர்களுக்கு உதவமுடியுமோ, அவ்வவ் வழியில் தகுந்த சிரமம் எடுத்துக்கொள்ளவேண்டுகிறோம். வெற்றி அதிலே தான் உள்ளது.

நான் கைதியாவேன்—காந்திஜி.

'எகோடி பாரிஸ்' என்ற பத்திரிகையின் நிருபர் ஒருவர் மகாத்மாவைப் பேட்டி கண்டு பேசினர். அப்போது மகாத்மா, தாம் இந்தியாவுக்குத் திரும்பி வந்தவுடன் கைதி செய்யப் படக் கூடுமென எதிர்பார்ப்பதாகக் கூறினர். பூரண சுய ஆட்சி தவிர வேறு எதையும் தாம் ஏற்கத் தயாராயில்லை யென்றும், வட்டமேஜை மகாநாடு முறிந்தால் தாம் திரும்பவும் 'போர்' தொடங்க நேருமென்றும், தலைவர்களனைவரும் கைதுசெய்யப்படுவரென்றும், தேசீய இயக்கம் பின்னும் மும்முரமாக நடைபெறுமென்றார்.

ஜெகஜ்ஜோதி.

(அல்லது.)

கற்பின் அணிகலம்.

(திருசிரபுரம் வரகநகர் வரகவி திருவாளர் சவரிநாதன் அவர்கள் எழுதியது.)

"தெய்வம் தொழாள் கொழுநன்றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"

என்ற திருவள்ளுவர் மொழியை ஒத்த குணங்களுடைய ஓர் மாது மாலைப்போதில் தன் தாதியருடன் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தாள். மந்த மாருதம் மிகு உல்லாசமாய் வீசிக்கொண்டிருந்தது. ஜெகஜ்ஜோதி என்ற அவ்வணங்கும் தர்மாம்பாள் என்ற அவள் தாதியும் அங்குள்ள புஷ்பங்களைக் கொய்து கொண்டே காலங்கழித்தார்கள். ஆனால் "அடுத்துகாட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்" என்பதுபோல் ஜெகஜ்ஜோதியின் மனத்திலுள்ள துயரத்தை அவள்முகம் பிரதி பிம்பமாய்க் காட்டினது. அவளுடைய அழகுக்கும் கல்விக்கும் குணத்திற்கும் அவளை விரும்பாத ஆண்களில்லை. ஆனால் அவளுடைய பெற்றோர்கள் அவளை தங்கள் பந்துவாகிய ஒரு வயோதிகருக்கு மணம்செய்துவைத்தார்கள். வயோதிகரான பரந்தாமருக்கு தன் மனைவிமீது எப்போதும் சந்தேகந்தான். ஒரு நிமிடமும் அவள் தன்னைவிட்டுப்பிரிய மனம் ஒப்பமாட்டார். இவரை மணந்த நாள் முதல் தன் தாய்வீடே சென்றறியாள். கற்பின் அணிகலம். ஜெகஜ்ஜோதி யாதாமொரு ஆடவரை வழியிற் கண்டாலும் வீட்டிற்கு வந்தவுடன் "அவனை ஏன் உற்றுப்பார்த்தாய்? கழுதை! உன்சங்கதிதான் தெரியுமே" என்று உதாசினவார்த்தைகளால் திட்டி, நூற்றுக்குத் தொண்ணூறுமுறை உதைதப்பாமல் கொடுப்பார். "கடவுள்பார்த்து இணைத்ததைமனிதன்பிரிக்காதிருப்பானாக" என்ற நீதிக்கிணங்கி அவ்விதக் கொடூர வாழ்க்கையை மனச்சமாதானத்துடன் சகித்துவந்தாள். இவள்குணத்திற்கு தக்காப்போல்

தர்மாம்பாள் அங்குவந்து சேர்ந்தாள். தர்மாம்பாளுக்கு வயது 45 இருக்கலாம். அவள் பால்யத்திலேயே விதவையாகிவிட்டபடியால் இல்லறம் என்பதை குருடன் சூரியனைக் காண்பதுபோல் கண்டிருந்தாள். பாலிய விதவையானதால் அவளை பல சீர்திருத்தக்காரர் முன்வந்னர். ஆனால் தர்மாம்பாள் "கணவன் மனைவி என்பது உயிருப்உடம்புமாம்.கணவன் பிரிந்தால் மனைவி கட்டைப் பிணம்" என்று பலவிதம் தனக்குத் தேறுதல் சொல்லி ஜெகஜ்ஜோதியிடம் சேர்ந்து வேலைக்கமர்ந்தாள். இருவருக்கும் எஜமானி, வேலைக்காரி என்ற வித்தியாசமே இல்லை. அன்பெனும் பாசத்தால் பிணைக்கப்பட்டிருந்தனர். தர்மாம்பாளே சகலகாரியங்களையும் கவனித்துவந்தாள். இவ்விதம் இருவரும் மலர்களைக் கொய்து அதைக் கோர்த்துக்கொண்டே வந்தனர்.

தோட்டத்தின் ஓர் பாகத்தில் போடப்பட்டிருந்த ஆசனத்தில் பதினன்கு வயதிற்கு மேற்படாத ஓர் யௌவன நங்கை படுத்துக்கொண்டு பொருமிக்கொண்டிருந்தாள். அவள் கூந்தல் அவிழ்ந்து தரைமேல் தொங்கிக்கொண்டிருந்தது. மதியைப் பழித்த முகத்தில் கண்ணீர் அருவியாய் வழிந்துகொண்டிருந்தது. "ஆ! என்ன கெம்பீரமான தோற்றம். நான் அவரை மறக்கலாமென்றாலும் என்மனம் அவரையே நாடுகின்றதே! ஏனோ என் தந்தையார் அவர் எழுதின கடிதத்தை வாங்கி வாசிக்காமல் தேவையில்லையென்று திருப்பிவிட்டார். அதில் என் தந்தையரின் சம்மதத்தைப் பெறவிரும்பினரோ, என் தந்தையின் உத்திரவைப் பெற்றுத்தானே அவர் இங்கு வந்தார். ஏன் என் தந்தை இப்பொழுது அவரை இவ்விதம் நடத்தவேண்டும். அவருடைய மனோகரமான வதனமும், களங்கமற்ற பார்வையும் என் மனதை அசைத்தனவே. அவர் எங்களிடம் உத்திரவுபெற்றுக்கொண்டு திருசிரகிரிக்கு செல்லும்போது என்மனம் என்னபாடுபட்டது. அன்று முதல் என் ஆத்மா அவர் உறையும் அரங்கமாயிற்றே. ஜெகத்ரக்ஷகா! ஆபத்பாந்தவா! அடியாள்மீது இன்னும் ஏன் கோபம்" என்று புலம்பினள்.

அவ்வழிவந்த ஜெகஜ்ஜோதியும், தர்மாம்பாளும் தலைவிரிகோலமாய்க்கிடந்த சரசாவைக் கண்டு, அவள் சொல்லியவார்த்தை

களை மறைவில் நின்றுகேட்கவே, அவர்களை அறியாமலே அவர்கள் கண்களினின்றும் ஜலம் வடியலாயிற்று. பின்னர் மனதைத் தேற்றிக்கொண்டு சரசாவினிடம் வந்து அவளை தூக்கி உட்கார வைத்துக் கண்ணீரைத் துடைத்து "ஏனம்மா அழுதுகொண்டிருக்கிறாய்" என்று வினவினார்கள். "ஒன்றுமில்லை" என்று சொல்லி பெண்களுக்கு இயல்பாயுள்ள நாணத்தால் தலை கவிழ்ந்தாள் சரசா. தர்மாம்பாள் பேசத் துவக்கி "அம்மா சரசா, மணம் செய்து நாங்கள் இருவரும் படும் கஷ்டத்தைக் கண்டு இவ்வுலக சுகங்களை வெறுத்து கன்னிகாமாடம் செல்லலாம் என்ற எண்ணத்துடனிருந்த நீ, இவ்விதம் காதல்வாய்ப்பட்டது எங்கள் பாக்கியமே! உன் தந்தையார் இது விஷயத்தில் சம்மதமில்லாதவர்போல் தெரிகிறது: எனினும் உங்களிருவரையும் ஒருமிக்கச் செய்த எம்பெருமான் உங்களைக் கைவிடமாட்டார்" என்றாள்.

சரசா ஜெகஜ்ஜோதியின் ஏகபுத்திரி. அழகே அவதாரமானாற்போல் உருவெடுத்த அந்நங்கை கல்லூரியில் பயின்றுகொண்டிருந்தாள். கல்வியில் சரஸ்வதியும், அழகில் லெக்ஷிமியையும், குணத்தில் அனுசூயையையும், ஒத்தவள். தன் தாயார் படும் கஷ்டத்தையும், பால்யவிதவைகள்படும் துயரத்தையும்கண்டதுமுதல் உலகவாழ்விற்குறிய மணத்தை வெறுத்து, கன்னிகாமாடம்புகுந்து தன் ஆயுள் உள்ளவரை மனமில்லா மணத்தையும், வரதக்ஷிணை என்னும், கொழுத்த கிழவர்களின் கிருதையும், ஒடுக்கவும், இளங்காதலர்களின் இனிமையைப் பெருக்கவும், பால்ய விதவைகளின் துயர்களைப் போக்கவும், தன் ஆயுளை அர்ப்பணம்செய்ய எண்ணங்கொண்டிருந்தாள். சகல ஜாதிகளுடன் பழகி மக்களுக்கு நன்மை செய்யத் தீர்மானித்தாள். ஆனால் அவள் தந்தையோ அவளை ஒரு கோடீசுவரனுக்கு மணம்செய்ய நிச்சயித்தார். அவனுக்கு இயற்கையழகும், நற்குணமும் கிடையாது. சரசா அம்மணத்தை வெறுத்தாள். ஆனால் கெம்பீரன் எனும் வாலிபன் மீது

நிற்க கெம்பீரண் திருசிரகிரியில் ஒரு புத்தகத்தை விரித்து வைத்துக்கொண்டு சிந்தனையிலிருந்தான். அவனுக்கு காரைமாநகரில் சரசாவைக்கண்டு பிரிந்ததிலிருந்து புத்தகத்தின்மேல் நாட்

டம் செல்லவில்லை "ஆ சரசா! நீ என்னை நினைக்கின்றாயோ! நான் உன் தந்தையின் நட்பை விரும்பி எழுதிய கடிதத்தை நிராகரித்து திருப்பிவிட்டாரே. அவராகவே செய்தாரோ. அல்லது சரசா மாறிவிட்டாளோ! நான் அவளைக்கண்டபோதெல்லாம் என்மனது புளகாங் கிதமுற்றதே! அங்கிருந்தவரை, என் நாட்டமெல்லாம் அவள் பால் சென்றதே! அவளும் என்னையே விரும்புவள் போலத் தோன்றினாளே! அவள் என்னைக் காணும்போதெல்லாம் அவளது அதரமலர்கள் மலர்ந்து புன்முறுவல் செய்தனவே! நான் கடைசியில் அவளிடமிருந்து பிரியும்போது அவளுடைய கயலவிழிகள் கமலம்போல் மலர்ந்து, கண்ணீர் அருவியாய் ஓட, அவள் மனம் என்மீது அருள்சுரக்கத் துடங்கினதே. ஈசா, இன்னும் உன்மனமிந்த ஏழைமீது இறங்கவில்லையா! நளனுக்காவது ஓர் மடவன்னம் தூதுசென்றதே! எனக்கு யாருமில்லையே" என்று வருந்திக்கொண்டிருந்தான்.

பரந்தாமர் வீட்டில் ஏககுழப்பமாய்க் கிடந்தது. ஜெகஜ்ஜோதி தன் கணவனிடம் சரசாவின் மனப்பான்மையை வெளிப்படுத்தி கெம்பீரனை வரவழைத்து ஏற்பாடுகள் செய்யும்படியும், கோடீசுவரனை தள்ளிவிடும்படிக்கும் கெஞ்சினாள். அவர் அவளை தையப்புடைத்து "முண்டைச்சிறுக்கிஉன்நடவடிக்கைகளையேஉன் குழந்தைக்கும்கற்றுக்கொடுத்துவிட்டாய்என்னிஷ்டப்படிஅதுநடப்பதா? முளைத்துமூன்றிலைகாண்பதற்குள் தன்னிஷ்டம்போல் நடப்பதா? அதற்குநன்மைதீமைஎன்னதெரியும். அந்தப்பயல்கெம்பீரன் உங்கள் யாவரையும்மயக்கிவிட்டான். நான் நினைத்தபடி கலியாணம் முடிந்த உடன் அவனை மானநஷ்டத்திற்கு சூட்டுப்போடுகிறேன். பார்" என்று வாயில்வந்தபடி யெல்லாம் பேசினார். அதுசமயம் அவ்வரைப் பக்கம் வந்த சரசா தன் தாயாரின் கோலத்தைக் கண்டாள். இதுகாறும் தந்தையைக் கண்டு நடுங்கிய மனம் கல்லானது. வெகு ஆக்ரோஷத்துடன் உள்நுழைந்து தன் தாயைத் தூக்கி "அம்மா நீங்கள் எனக்காக வருந்தவேண்டாம். எனக்கு கோடீசுவரனும் வேண்டியதில்லை, கெம்பீரனும் வேண்டியதில்லை. நான் இனி சீர்திருத்தக்காரர்களுடன் சேர்ந்து தேசசேவை செய்யப் போகின்றேன்" என்று சொல்லி வெளிக்கிளம்பினாள்.

அவள் தந்தை அவளைப் பிடித்து "அடி வேசி உனக்கு இவ்வளவு தைரியமா" என்று சொல்லி ஓர் அறையில் அடைத்து, தர்மாம் பாளை மட்டும் இருக்கும்படியும் ஏற்பாடு செய்தார். பிள்ளையைப் பெற்றும் அவர்கள் சுகதுக்கங்களைக் கவனியாத பெற்றோர்கள் எத்தனைபேர்? தாய், தந்தையாரையும், விட்டு, கணவனே சரணு கதி யென்று வந்த தம் மனைவியர்களை சந்தேகித்தும், பலவிதமாய் துன்புறுத்தியும் அவர்கள் வாழ்நாளை கண்ணீரும், கம்பலையுமாக்கி நரகவேதனை அனுபவிக்கச்செய்யும் பைசாசங்கள் எத்தனை. பணப்பித்தாலும், புத்திமட்டாலும் தங்கள் பாவையர் களைப் பாழாக்கும் பாதகர்கள் எத்தனை.

சரசா, நாளுக்கு நாள் மெலிந்துவந்தாள். அவளை கவனித்து வந்த டாக்டர் அவள் பிழைப்பது துர்லபம் என்றார். சரசா நாள் முழுவதும் "கெம்பீரா" வென்றே பிதற்றிக்கொண்டிருந்தாள். கடைசியாக டாக்டர் அவளுக்கு இஷ்டப்பட்டவர்களை யெல்லாம் அனுமதிக்கும்படியும், சில வேளை கெம்பீரன்வந்தால் ஏதாவது அவள் விஷயத்தில் நம்பிக்கை ஏற்படலாம் என்றும் கூறினர். பரந்தாமனின் பிடிவாதநெஞ்சம் மாறியது. தன் ஏகபுத்திரியை, மானிடர் மெச்சும் மரகதத்தை, வண்டுகள் மொய்க்கும் வெண் மலரை, கொன்ற பழித்தன்மேல் வருமே என்ற பீதி உண்டாகி யது. உடனே தந்தியாபீசுக்குச் சென்று கெம்பீரனை புறப்பட்டு வரும்படி தந்திகொடுத்தார்.

கெம்பீரன் கால்பந்து போட்டியில் ஜெயித்து ஆனந்தமாய் வீட்டில் வந்து உட்கார்ந்தான். உடனே தன் இன்ப சரசாவின் ஞாபகம் வந்தது. அதற்குள் தந்திபியூன் "கெம்பீசர் உள்ளே யா" என்றான். வாயிற் காப்போன் தந்திபியூனை உள்ளே கூட்டிச் சென்றான். கெம்பீரன் கையெழுத்துப்போட்டு தந்தியை வாங் கினன். அவனையறியாமலே அவன் கைகள் நடுங்கின. மேலெல் லாம் வியர்வைதட்டியது. வெகு ஆத்திரமாய் அதை உடைத்து வாசித்தான்.

"காரைமாநகர் 17,16—30 19,35,
கெம்பீரன் பீ. ஏ. பீமநகர் திருசிரகிரி

"சரசா சாகும் தருவாய் டாக்டர்கள் கைவிட்டனர். அவசியம் பார்க்க விரும்புகிறாள். இரவு புறப்படவும். காலை ஸ்டேஷனில் கார் காத்திருக்கும். பரந்தாமன்."

உடனே பித்தன்போல் இங்குமங்கும் ஓடினான் "சரசா, ஆ என் பிரிய சரசா! உன்னை அவ்விதம் காணவோ நான் இப்பாடுகள் பட்டேன்! மணபந்தத் துகிலோடு உன்னை மணக்க நான் எண்ணமிட்டேனே! மகிழ்வது மிதுதானோ" என்று புலம்பினான். கடிகாரத்தைப் பார்த்தான் மணி 9 ஆகியது. உடனே தன் காரைக் கொண்டுவரச்சொல்லி ஸ்டேஷனுக்கு புறப்பட்டான். இரண்டாவது வகுப்பு டிக்கெட் ஒன்று பெற்றுக்கொண்டு ரயிலில் ஏறினான். இரவெல்லாம் தூக்கம்பிடிக்கவில்லை. வண்டி காரைமாநகர் அடைந்ததும், பரந்தாமன் காரில் ஏறி, பங்களாவில் இறங்கினான். அவன் வரவை எதிர்பார்த்திருந்த பரந்தாமரும், ஜெகஜ்ஜோதியும் அவனை எதிர்கொண்டழைத்தனர். "சரசா, எப்படி இருக்கிறாள், மாமா, நான் பார்க்கலாமா" என்று பதறிக்கொண்டே சரசா படுத்திருந்த அறையுள் நுழைந்தான். அவன் வரவைக்கண்ட சரசா "ஆ இப்பொழுதுதான் உங்கள் மனம் இறங்கியதோ" என்று சொல்லி தன் படுக்கைமீது அதுவரை இல்லாத ஓர் வலுவுடனும், பிரகாசத்துடனும் எழுந்து உட்கார்ந்தாள். "பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ!" கெம்பீரன் அவளைப் பஞ்சணைமீதி படுக்க வைத்து அண்டையிலிருந்து உபசரணைசெய்து வந்தான். டாக்டரும் சில நாளில் "இனி பயமில்லை" என்று சொல்லிவிட்டார். சில மாதங்கள் கடந்தன.

சரசாவும், கெம்பீரனும் உல்லாசமாய்பேசி விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். ஜெகஜ்ஜோதி கடவுள் தனக்கு செய்துள்ள நன்மையைக்கண்டு களித்துக்கொண்டு நிற்கிறாள். பரந்தாமர் தன் கற்பரசிக்கு செய்ததற்காக வருந்தி நல்வழிப்பட்டு க்ஷேமமாய் வாழ்ந்தார். சுபம்.

கல்வி என்பது யாது?

(தென் ஆப்பிரிக்கா, டர்பன் சரஸ்வதி சபைத்தலைவர்

திரு. ச. முனிஸ்வாமிப் பிள்ளை அவர்கள் எழுதியது.)

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்,
நிற்கவதற்குத்தக" வென்று.

திருக்குறளினது கல்விப்படலத்தில் காணப்படும், இவ்வருஞ் செய்யுள், வெகு சிறிதாகத் தோன்றினும், அதிலடங்கிய கருத்து அற்பமன்று. இவ்வுலகின் கண் கடவுளை அறியவும், அவரை அடையவும், கடமைப்பட்டிருப்பது எல்லோருமே யாதலால், அதன் பொருட்டு மானிடர் ஏதேதுசெய்தல்வேண்டுமோ, அவெதல்லாவற்றையும் இச்சிறு செய்யுளாலேயே யறியலாம். அஃதெவை யெனின் யாவரும் கற்கவேண்டுமென்பது, எப்பேர்ப்பட்டவை எவ்வண்ணமாய் கற்றல் வேண்டும், முடிவில் அவைகளைக் கற்றபின் அவைகளுக் கொத்தாப்போல் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பனவாகிய இவைகளேயாம். இவ்விதக் கருத்துக்களை கொண்டிருப்பதினாலன்றோ அதனை,

"கடுகைத்துளைத் தேழ்கடலைப்
புகட்டிக் குறுகத்தரித்த குறள்"

என்றும் புகழுலானார்கள்.

எல்லோருமே கற்கவேண்டுமாதலால், கல்வியின் சிறப்பே சிறப்பு. இங்கு அதன் மதிப்பு—மகத்துவத்தைப் பற்றிய பிரபந்தங்கள் அநேகமுண்டு, ஆனால் இணையற்றஇனிய கல்வியின் சிறப்பை யறிய விரும்புவோர் குறள், நாலடியார், தாயுமாணவர்பாடல், முதுமொழி, நீதிநெறிவிளக்கம், சீவக சிந்தாமணி, அறநெறிச் சாரம், நான்மணிக் கடிகை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் முதலிய நூல்களிலும், ஐம்பத்துமூன்று நூல்களிலிருந்து கோய்தெடுத்த கண்களைப்

பறிக்கத் தகும், புஷ்பங்களுக் கொத்த அனேகச் செய்யுள்களு டைய பன்னூற்றிரட்டின் கல்வியதிகாரத்திலும் விரிவாய்க் காண லாம்.

ஒருவன்தான் கற்பதற்குரிய நூல்களை, அதாவது அறநூல் நீதிநூல் முதலியவற்றை யறிதலே கல்வியாம். மானிடராயுதித்த எவருமே, ஆணானாலும் சரி, பெண்ணானாலும் சரி, யாதொரு பாகுபாடின்றி ஒவ்வொருவரும் கற்கவேண்டும். மேன்மக்களா யினும், பெரியோராயினும், சிறியோராயினும், செல்வத்தில் வாழுபவ ராயினும், யாசகத்தால் பிழைப்பவராயினும், யாவருமே கல்வி கற்கவேண்டும். இது ஏனோ வென்றும் சிலர் எண்ணலாம். கேட்கலாம் இதற்கு மறுமொழியாக நாமும் ஓர் கேள்விகேட் போம். அதாவது அவ்வாறு நினைப்பாரில் ஒருவனாகிலும் தன்னைப் பிறர் மடையன் என்றும், தெரியாத மூடன் என்றும், சொல்லக் கேட்கப் பிரியப்படுவானோ? அப்படிச் சொல்லப்பட அல்லது எண்ணப்பட ஒருகாலும் பிரியப்படமாட்டானல்லவா? ஆகையாற் றான் எவரும் கற்கவேண்டுமென்பது. மனிதனை பரிகாசமாய் ஓர் விநோதம் விரும்பும் பிராணி என்பார்கள், இது மெய்யே. எவனுக்குத்தான் விநோதம் அதாவது நூதனமானதைக் கேட்க அல்லது அறிய மனமிராது? இன்னும் 'மக்கடாமே யாரறிவுயிரே' என்று தொல்காப்பியம் செப்புமாப்போல், மக்கள்மனிதர்என்னும் பதத்திற்கு அறிவுள்ளஓர்உயிர்என்றபொருள். இதில்மனிதனுக்கு உயிரும் அறிவும் பிரதானமென்று அறிகின்றோம். ஆனால் கல்லாத வன் அறிவின்றி யிருக்கின்றான். ஆகையால் விலங்கிற்கும் நமக் கும் என்ன வித்யாசமிருக்கிறது? உண்மையாக அறிவற்றவன் ஓர் மிருகமே அன்றியும் "அறிவுடையாரே எல்லாமுடையவரா வர்" என்ன காரணத்தால்? செல்வங்களெல்லாம் அறிவினாலேயே சேகரிக்கப்படுகிறதாலும் அப்படி சேகரித்தவைகளைக்காக்கவும், அறிவே அத்தியாவசியமாதலாலுமே.

பொருள்கள் இருவகை. கல்விப்பொருள் செல்வப்பொருள் இவற்றில் கல்விப்பொருள்தான் சிறந்தது. ஏன்? செல்வம் அள்ளுந்தோறும் குறையும், கல்வியோ சொல்லுந்தோறும் நிறை

யும், செல்வமோ கள்வரால் அபகரிக்கப்படும். கல்வியை யபகரிக்க முழுக்கள்வராலும் முடியாது. செல்வம் துன்பத்தைத் தரலாம். கல்வியோ அதை நீக்கி இன்பத்தைத் தரும். எவ்வயதிலும் கல்வி கற்கலாமென்றாலும், "முதல்கோணல் முற்றுங்கோணல்" ஆதலால், சிறு பிராயத்திலேயே படித்து நல்வழியில் நடாவாமற் போவோமானால் நமதுவாழ்நாள்முழுமையும் நஷ்டத்துக் கேதுவாயிருக்கும். இதனால் தான் ஔவையார் "இளமையிற் கல்" என்று சொல்லியிருக்கின்றார். இதனால் இளமைப்பருவம் தீர்ந்த பிற்பாடு, ஒருவரும் படிக்கக்கூடாது என்பது அப்பிராட்டியாரின் கருத்தன்று "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்பதுபோல், இளமையில் வித்யாப்பியாசஞ் செய்தால் மனதில் நன்றாய்ப் படியுமென்பதே கருத்து. "தாம் உயர்குலத்தாராகையால் தமக்கு கல்வி அவசியமன்று" என்பார்கள் இப்படிச் சொல்லுகிறவர்களை மதீயீன ரென்றுமட்டுமே யல்லாது குருட ரென்றும் சொல்ல வேண்டும். ஏனெனின்,

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்"

என்றார் வள்ளுவரும், மற்றுஞ் சிலர் கற்பது உத்தியோகம் அடைந்து பணம்சம்பாதிப்பதன் பொருட்டாதலால், பொருளோடு கூடியவராகிய நாம் படிக்கவேண்டியதில்லை என்பார்கள்.

"நெல்லுக்கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடி
புல்லுக்கு மாங்கே புசியுமாம்"

என்பதற்கிணங்க, நெல்லுக்கிறைத்தநீர் பிரதானமாய் நெற்பயிருக்காயினும், புல்லுக்குமுதவுவதுபோல், நாம் படிப்பது முக்கியமாய் நமது அறிவை விருத்திசெய்து, நற்குண நற்செய்கையும், தெய்வபக்தியும் அடையவானாலும், அப்படிப்பு, செல்வம் சம்பாதிக்கவும் உதவுகிறது. ஆனால் படிப்பது பிரதானமாக பணம் சம்பாதிப்பதற்கே என்பது தப்பெண்ணம். செல்வமுடையோர் இவ்விதமாய் நினைந்து கல்லாததாலும், கற்றதனாலாய பயனாகிய அநேக புது இயந்திரங்களையும், விவசாய வர்த்தக முயற்சிகளை

யும் அனுசரித்து பிரயோசனமடையாமற் போவதாலுமே நமது தேசம் க்ஷீணதசையிலிருக்கின்றது. மேல்நாட்டாராகிய ஐரோப்பியரும், இப்படிச் செய்திருப்பாராயின் நமக்கு இப்போது அதியுபயோகமாயிருக்கின்ற நீராவியந்திரம், தபால் முதலியன சொப்பனத்தில் கண்டனவாகவே இருந்திருக்கும். வேறு பலர் நாம் ஏழைகள் எப்படிப் படிப்போம் என்பார்கள். நமது தேசத்திலேயன்றி எத்தேசத்திலேயும் கற்றவர்களில் எத்தனையோபேர் முழு தரித்திரர்களாயிருந்தார்களென்று பூர்வ சரித்திரத்தினலறிந்திருக்கிறோம். திருவள்ளுவர், ஔவையார், சத்திமுத்தப்புலவர் முதலாயினோர்களின் வறுமையைப் பற்றியாவது யார்தான் அறியார்கள்? திருவள்ளுவர் நெசவுத்தொழில் செய்துவந்தார். ஔவையார் சில வேலைகளில் யாசகம்செய்து பிழைத்துவந்தார். சத்திமுத்தப் புலவர், தன் வீட்டு அடுப்பில் பூனை தூங்க, அங்கே ஊர்ந்துவருமெறும்பிற்கும் ஆஸ்பதமில்லாதபடி உண்ண உணவும், உடுக்க உடையுமற்ற அஷ்ட தரித்திரராக இருந்தார். கார்பீல்டு என்பவர் வெகு தரித்திரனாயிருந்தும் தான் கற்ற கல்வியின் திறமையினாலேயே வட அமெரிக்கா ஐக்கிய மாகாணத்திற்கு அதிபதியானார். விலிங்க்ஸ்டன் என்பவர் தன் சிறு பிராயத்தில் வருடந்தோறும் ஆறுமாசம், கூலிவேலைசெய்து ஆறுமாசம் படித்துவந்தாராம். ஆகையால்,

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

அனேகர் பள்ளிக்கூடம் விட்டவுடனே படிப்பெல்லாம் முடிந்ததென்கிறார்கள். இது தப்பெண்ணம். நாம் பள்ளிக்கூடங்களில் படிப்பதெல்லாம் பின்னர் படிப்பவைகளுக்கு ஓர் அஸ்திவாரமென்றே மனத்தில் நன்றாய் அமைக்கவேண்டும்.

இவ்வுலகின் கண் இருள் இருவகைப்படும். அவையாவன. அகவிருள், புறவிருள். புறவிருளை சூரியன் நீக்குவதுபோல் நமது அகவிருளை நீக்கக்கூடியது அரிய கல்வியே. "கைப்பொருடன்னின் மெய்ப்பொருள் கல்வி" என்பதால் எல்லோருமே கல்வியைக் கடைப்பிடிக்கவேண்டும். "வித்தை விரும்பு" என்றும் சொல்

லப்பட்டிக்கிறதே! இதனல் மானுட சென்மமெடுத்த சகலரும் கற்கவேண்டுமென்று தோன்றவில்லையா?

"கல்வி கரையில கற்பவை நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதி
ணாய்ந்தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து"

என்றபடி எல்லாவற்றையும் கற்றுணர நமது ஆயுள் கொஞ்சம். சரீரமோ பிணிக்கெல்லாம் பிறப்பிடம் ஆகவே அன்னப்பக்ஷியானது நீரைப் பிரித்துப் பாலைப் பருகுவதுபோல், இகபாசாதனங்கட்குரிய நல்ல நூல்களையே கற்கவேண்டும்.

சிலர் மதியீனராய் "கண்டதையும் கற்கப் பண்டிதனுவான்." என்னும் தப்பபிப்பிராயத்தோடு பயனற்றதும் தமக்குக் கேட்டைத் தருவதுமாகிய நூல்களைக் கற்பதில் காலத்தைக் கழிக்கின்றார்கள். கணக்கில்லா மேன்மையும் அதியுபயோகமுமான புஸ்தகங்களிருக்க "வேம்பன்றோ காக்கை விரும்புங்கனி" என்பதற்கேற்ப பயனற்றவைகளை வாசிப்பது என்ன வாசிப்பு. என்ன வைத்தியம்! உத்தமமாக புஸ்தகங்கள் எவையெனில் வாசிப்போர் தம் மனதுக்கு தக்கவையாக இருக்கும் நூல்களே. திருஷ்டாந்தமாக ஒரேவிதமான புஷ்பத்தில் சிலந்திப்பூச்சி விஷம்சேர்க்கவும், தேனீயோ, இனிமையான தேனைச் சேர்க்கின்றது. அவ்வண்ணமே, ஒரே புத்தகம் அதை வாசிப்பவன் மனதுக்குத் தக்கவாறுன வாசகத்தையோ, அல்லது ஜீவவாசகத்தையோ தரலாம். ஆகையால் தத்தம் ஸ்திதிக்கும் மனதுக்கும் தக்கவையே வாசிக்கவேண்டும். ஆனல் நமது ஆறுதலுக்காக எப்பேர்ப்பட்டவரும், எந்த ஸ்திதியிலுள்ளோருமே எப்பேர்ப்பட்ட மனதுக்குமே தக்க ஓர் புத்தகமுண்டு அதுதான் பரிசுத்த வேதாகமாம். அதைப்போன்ற விலையுயர்ந்தமாணிக்கம் பூமியிலுள்ள எச்சுரங்கங்களிலுமில்லை. அதில் நிறைந்துள்ள கருத்துக்களைப்போல் வேறொன்றிலும் கிடையாது. யாவருமே இதை வாசித்து மகிழலாம். கணக்கில்லா கவிவானர்களும், அதின் பரிசுத்தப் பக்கங்களிலிருந்து தான், தம் உன்னத

காரியங்களுக்கு இனிமையையும், இசையையும் இரவல் வாங்கு கிருர்கள். ஆகையின், மனிதனுக்கு பிரயோஜனமாயும் விசேஷ மாய் ஆராயவும் வாசிக்கவும், யோசிக்கவும் தக்கது பரிசுத்த வேதாகமமேயாம்.

கற்கக் கடமைப்பட்டவன் கற்கத் தகாதவைகளை யகற்றி தக்கவைகளை தேர்ந்தெடுத்துக்கொண்டு சிறுபருவத்திலிருந்து தானே அதைக் கற்பதில் அவாகொண்டிருக்கவேண்டும். இனி தலைப்பிற் கூறிய செய்யுளின் முதற்பாகமாகிய 'கசடற' என்பதைப் பற்றி சிறிது ஆலோசிப்போம். கசடற என்னும் பதத்திற்கு குற்ற மற என்பது பொருள். அதாவது அரைகுறையில்லாமல் ஐயந் திரி பறப்படிக்க வேண்டுமென்பது. மேலும் படிக்காதிருப்பதும் அல்லது அரைகுறையாய்ப் படிப்பதும் வெட்கக்கேடே என்று அடியில் தோன்றும் ஒரு சிறு மெய்க்கதையால் தெரியவரும். கல்வியைப்பற்றிய வியாக்கியானத்தில் புல்லறிவாளரும் படிக்க லாம், என்று சொல்லக்கேட்டுக்கொண்டிருந்த ஒரு அரைகுறைப் படிப்பாளி, பிரமித்து ஆ! ஆ! புல்லை வெட்டும் அறிவாள் கூட படிக்கமுடியுமோ? என்று சொல்ல எல்லோரும் கொல் லென்று நகைத்தார்கள்.

பலர்பொழுது போக்குக்காக வாசிக்கிருர்கள். இப்படி வாசிப் பவர்கள் கசடறக் கற்பார்கள் என்பது அசாத்தியம். நூல்களின் சாராம்சங்களைத் தக்கபடி கிரகிக்கவும் சரித்திர சாஸ்திர விஷயங்களைத் தெரிந்து கொள்ளவும், பாஷை, நடை படித்துக்கொள்ளவும் வாசிப்பது நல்ல நோக்கங்களே யாஞலும், அதிலும் சிறந்தது சத்தியத்தை யறியவும் ஞானத்தை சம்பாதிக்க வும் வாசித்தலேயாம். ஆகவே அவசியத்தையும், யுக்தாயுக்தத்தை யும் அநுசரித்து வாசித்தல் வேண்டும். ஒரு ஆங்கிலேய வித்து வான் சொல்வதுபோல, சில புஸ்தகங்களை ருசிபார்க்கமாத்திரம் வாசிக்கவேண்டும். அதென்ன வெனில், அதன் பகுதிகளைப் பார்த்தால் மாத்திரம் போதும், வேறு சிலவற்றை நாவில்போட்டு பல்படாமல் விழுங்கிவிடவேண்டும். அதாவது அதிக ஆராய்ச்சி யில்லாமல் வாசிப்பதுபோதும்.

மற்றும் சிலவற்றையோ வாயிலிட்டு நன்ருக மென்று அரைத்து இரைப்பையில் இறக்கி ஜீரணித்துக்கொள்ளவேண்டும்.

அதன் தாற்பரிய மென்னவெனில் அறிவின் களஞ்சியம் போ லுள்ள நூல்களைக் கொஞ்சம் கொஞ்சமாயும், ஆதியோடந்தமாயும், முழுக்கவனமாயும் வாசித்து வரவேண்டியதேயாம். வாசிக்கும் போது நாம் வாசிக்கும் புஸ்தகத்தை நம் முன்னால் வைக்கின் றோம். அதுபோலவே புஸ்தகத்தின் முன் நம்மனத்தையும் செலுத்தவேண்டும்.

சிலர் அதிகமாய்க் கற்கவேண்டுமென்று, வாசித்தது பாதி, வாசியாதது பாதியாய், புஸ்தகங்களின் ஏடுகளை மாத்திரம் திருப்பு வதில் திருப்தி அடைகின்றார்கள். இது பயனற்ற காரியமென்று நாம் சொல்லவேண்டுமா? கற்பது கணிதமோ? ஆத்திரமோ? சாத்திரமோ? தமிழோ? ஆங்கிலமோ? அதைக் கசடறக் கற்க வேண்டும். நாம் ஒன்றை வாசிக்கத் தொடங்கும்போது அதன் முகவுரையாலும், பொருள் அட்டவணையாலும், அதிலடங்கிய பொருள்களைக் கவனிக்கவேண்டும். பிறகு வாசிக்கையில் அதன் தாற்பரியம் இன்னதென்று, மனத்தில் திட்டமாய் பதியச்செய்ய வேண்டும். வாசிக்கையில் நமது மனத்தில் எழும்பும் அபிப்பிராயங் களை ஒரு சிறு கடுதாசியில் சுருக்கமாய்க் குறித்து வைப்பதும் நன்று. பிறகு வாசித்தவைகளை நாம் யோசிக்கவேண்டும். வாசித்த வைகளையோசியாதவன், தன் களஞ்சியம் நிறைய அரிசி முதலியன இருந்தும் அதைச் சமைத்து சாப்பிடாமல் ஐயோ, நான் பசியால் வருந்துகிறேனே, பலமில்லையே, என்று சொல்பவனுக்குச் சமானம். இதுவிஷயமாக நன்னூல் ஆசிரியரான பவணந்தி முனிவர், பசு வானது புல்லைமேய்ந்து ஓரிடம் அமர்ந்து அதை மீட்டும் அசை போடுமாப்போல், அதாவது தன் வயிற்றினுட் சென்ற இரையை சிறிது சிறிதாக வாயுள் வருவித்து மென்றுதின்பதுபோல், நாமும் வாசித்தவைகளைக் கொஞ்சங் கொஞ்சமாய், நினைவிற்கு கொண்டு வந்து அவைகளைச் சிந்திக்கவேண்டும் என்றார். வாசித்தவைகளைத் திரும்பப் பார்வையிடல் வெகு நன்றென்று கீழ் தேசத்தாரிலும் மேல் தேசத்தாரிலுமுள்ள சிரோன்மணிகள் கூறியிருக்கிறார்கள், இதனால், திறமையற்றவர்களும் சிறந்த பண்டிதரானார்கள் என்று இதிகாசம் காட்டுகின்றது. மதுரை செந்தமிழ் சங்கத்திலே கீர்த்தி பெற்றவர்களில் குடவுனார், ஒருவர், இவர் முதலில் ஒருபாட்

டையே திரும்பத் திரும்பப்படிக்கு முன் ஒவ்வொரு உளுந்தாய்ப் போட்டு ஒருகுடம் நிப்பிவிடுவாராம். இன்னொருவர் சீத்தலை சாத்தனார்! என்பவர் இவருக்கு அதிகஞாபகக் குறைவாதலால் படித்ததையே அநேகமுறைபடிப்பதுவழக்கம். ஆகிலும், மனத்திற் படியாததால்வாசிக்குந்தோறும்முறைக்கொருதடவை எழுத்தாணி யால் தன்சிரசில் குத்திக்கொள்வார். அதனால் அவர்தலைஎப்போதும் சீவடிந்துகொண்டிருந்ததாம். இதனாலன்றோ, இவர்களிருவருக்கும் முறையே "குடவுளுந்தர்" என்றும் "சீத்தலைசாத்தனார்." என்றும்காரணப் பெயர் வழங்கலாயிற்று. வேறொருபயனுள்ள காரியம் நாம் வாசித்தவைகளின் பொருள் சுருக்கமாயும், வகையாயும், ஒழுங்கு படுத்திஓர்புத்தகத்தில்வரைந்துவைப்பது. இப்படிச்செய்வதால், நாம் வாசிப்பவை மனத்தில் செவ்வையாய்ப்படிவதும் தவிர, நமது அபிப் பிராயங்களை வெகுவாய் வெளியிடும் திறமையையும் அடைவோம்.

தேவை! தேவை!!

நமது 'நவமணி'க்குத் தமிழ் நாட்டிலும் பர்மாவிலும் சந்தாதாரர்கள் சேர்க்க புதிய எஜண்டுகள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும். திறமையாக வேலை செய்பவர்களுக்குச் செலவிலும் ஒரு பகுதிகொடுக்கப்படும். ஆனால், ரூபாய் இருநூறு ரொக்க ஜாமீன் கட்டவேண்டும். அதற்கு அவை வட்டி கொடுக்கப்படும். அல்லது நம்மை அறிந்தவர்களைக் கொண்டு திருப்திப்படுத்தவேண்டும். இசைந்தவர்கள் உடனே மனுச்செய்துகொள்ள வேண்டுகிறோம்.

மானேஜர்.

நவமணி பத்திரிகாலயம்.

பள்ளத்தூர்.

மாதர் கல்வி.

(டாக்டர் முத்துலக்ஷிமி அம்மாள் அவர்கள்.

வகுப்புச் சங்கங்கள், ஓர் வேளை சுயராஜ்யத்துக்கு இடையூற்றை உண்டாக்குமோ வெனச் சிலர் சந்தேகிக்கலாம். அப்படியன்று. குறிப்பிட்ட பல நன்மைகளைப் பெறுவதற்கு இத்தகைய சமூகச் சங்கங்கள் சாதனமா யிருக்கிறதென்பது ஓர் தலை, மற்றும் ஒவ்வொரு வகுப்பிலும், முன்னேற்றமடைந்துள்ளவர்கள், அவ்வகுப்பில் தாழ்ந்த நிலையிலுள்ளவர்களைக் கைதூக்கிவிட இச்சங்கங்கள் சிறந்த உதவியாயிருக்கும். ஆக, இம்மாதிரியான சாதனங்களைக் கருவியாகக் கொண்டு, நான் கூறியுள்ள விஷயங்களில் நம் நாட்டினர் முற்னேற்றமடைய வேண்டு மென்பதே அபிப்பிராயமாகும்.

இனி அன்னைகளாயிருப்போர்.

வகுப்பு முன்னேற்றத்தையே பெரிதும் கருதி உழைக்கின்றவர்கள், அச்சமூகத்திற்கு இன்றியமையாதவைகள், எவைகளோ அவைகளைப் பரிசிலனை செய்து, அதற்கான துறையில் இறங்கி உழைக்கும்போது, பெண்கள் விஷயத்தைக் கவனியாமல் விட்டு விடுகின்றனர். அப்படிக்கின்றி, ஓர் வேளை கவனித்தாலும் அதில் அவ்வளவு பொருப்பான உணர்ச்சி கொள்ளுவதில்லை. சமூக உணர்ச்சிக்கென்று உழைப்போர் பணந் திரட்டுகின்றனர்: செலவழிப்பதற்கு வழி கோறுகின்றனர். ஆனால் பெண்கல்விக்கென்று ஒதுக்கிவைக்கப்படும், தொகையோ வெகு சொற்பமாயிருக்கும். ஆண் கல்விக்கென்று ஏராளமாகப் பணம் சேர்க்கப்படுகின்றது. இன்னமும் போதாதெனக் கூறி, தினமும் அதுவே வேலையாயிருக்கும் சங்கங்களும், சமூகங்களும் உண்டு. எனினும் தேசத்தின் ஆபரணங்களாக ஜொலிக்கும் பெண்கள் முன்னேற்றமடைவதற்கென்று எடுத்துக்கொள்ளப்படும் பிரயாசையும் செல

வழிக்கப்படும் தொகையும் வெகு கொஞ்சமா யிருக்குமென்பதில் ஆக்ஷேபனை யில்லை.

பெண்கள் முன்னேற்றமே, இப்போது வேண்டற்பாலது: மாதர் கல்வி விஷயத்திலேயே இப்போது நாம் உழைக்கவேண்டியது, என எங்கும் கூறப்படுகின்றது. இதற்கான முயற்சிகளும் ஆங்காங்கு தோன்றி யிருக்கின்றன. இந்த முயற்சியுடனேயே, தளராது முன்னேற்றதுக்கான வழியில் கூடிவிட வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயமாகும். உண்மையில் இன்று சிறுர்களாயிருப்போரே, எதிர்காலத்தில் பெரியவர்களாகி சம்பாத்திய புருடர்களாகவும், தேச நன்மைக்கென்று உழைக்கின்றவர்களாகவும் வருவார்கள்: இப்படி நினைப்பதுபோலவே, இன்று சிறுமிகளா யிருப்போரே, எதிர்காலத்தில் குடும்ப அரசிகளாகவும், அன்னைமார்களாகவும் வருவார்களென்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்திற் கொள்ளவேண்டும். இப்படி ஆண்களும், பெண்களும் எதிர்கால நிலைமையில் முன்னுக்கு வருவதான திட்டங்களுடன், இப்போதே நடத்தப்பட்டால், இந்நாடு மலைமீதேற்றிய தீபம் போல் பிரகாசிக்குமென்பதில் எட்டுணையும் ஐயமுளதோ?

புருடர் கடமை.

இந்தியாவில் தேசீய முன்னேற்றமோ, அன்றி சமூக அபிவிர்த்தியோ, மிகுவிரைவாகச் செல்லாமல் தடைபட்டுக் கிடப்பதற்குக் காரணம், நமது பெண்களிடம் அறியாமை மலிந்திருப்பதினாலேயே. பெண்கள், ஏனையோர்க்கு அடிமையாயிருந்து, புருஷர்களுககுத் தங்களை முற்றிலும் அர்ப்பணம் செய்து, தங்கள் சுகத்தைப் பெறிதென்று பாராமல் இருக்கும்வரை வீட்டில் அவர்களுக்குச் செல்லாதிருக்கின்றதே தவிர, கொஞ்சமும் சுதந்தரம் இருப்பதாகத் தைரியத்துடன் கூறமுடியவில்லை. சில தினங்களுக்கு முன்னர், என்னுடைய வைத்திய நண்பர்கள் சிலருடன் பேசிக்கொண்டிருக்கும்போது, ஓர் வருந்தத்தக்க செய்தியை என்னிடம் கூறினார்கள். அதாவது நல்ல திடகாத்திரமுள்ள இளம் மனைவியை யுடைய ஓர் ஹிந்து, தான் இரண்டாந்தரமாக ஓர் கிருஸ்துவ மாதை மணம்செய்யத் தீர்மானித்து, அதற்கான

அழைப்புக் கடிதத்தை, முதல் மனைவியிடம் கொடுத்து அவள் சிநேகிதிகளுக்கும் கொடுக்கும்படி சொன்னாராம். இத்துடன் நில்லாது, வேறு எவளையேனும் அழைத்துக்கொண்டு வீட்டில் வைத்துக்கொண்டு அவளுக்கும் பணிவிடை செய்ய இவளுக்கு உத்தரவு செய்தாராம். இதெல்லாம் கொடுமையன்றோ? இவ்வித முறையற்ற விஷயங்களைக் கவனிக்க வேண்டாமா? ஒருவருடைய சுதந்தரத்தைப் பாழாக்கி, தான் மாத்திரம் சுகப்பட வேண்டுமென எண்ணும் எண்ணம் என்று ஆடவரிடமிருந்து விலகுமோ, அப்போதுதான் சமத்துவதர்மம் உதயமாகுமென கூறுவேன். இங்ஙனம் கொடுமை புரிவதைக் கண்டு, அப்பெண்ணும் வேறு திக்கின்றி, வாயை துடைத்துக்கொண்டிருப்பதால் அவளைச் சேர்ந்தவர்களும் அவ்விதமிருப்பதே தகுதி எனவும் கூறுவார்கள். ஏனெனில் இந்நாட்டின் சட்டம் அவ்விதமிருக்கின்றது. அநேக ஸ்திரீகள், கொடிய இருதயத்தை யுடைய புருடர்களின் கொடுங் கோன்மையிலிருந்து தப்புவிப்பதற்காகத் தற்கொலை புரிந்து கொள்ளும் செய்திகளை வாசித்து மிருக்கிறோம். பெண்களின் இப்போதைய நிலையில், இப்படிச் செய்வதைத் தவிர வேறு என்னதான் வழி யிருக்கின்றது? காரியம் இப்படியிருப்பதால், தேசத்திலுள்ள தலைவர்களும், பொதுஜனங்களும், அரசாங்கத்தாரும் பெண்கல்விக்கென உழைக்கும்படி முன்வர வேண்டுகிறேன். மேனாட்டினை எடுத்துக்கொள்ளுவோம். அங்கு பெண் கல்வி மிகவும் உச்சஸ்தானத்தை அடைந்திருக்கின்றது. இதனால் அங்குள்ள ஜனங்கள் சமூகவியலிலும், அரசியலிலும், பொருளாதார விஷயங்களிலும் முன்னேற்றமடைந்திருக்கின்றனர். 100-க்கு 50 விதம் சிசுமரணங்களும், வாலிப மரணங்களும் குறைந்திருப்பதைப் பிரத்யக்ஷத்தில் காண்கிறோம். பெண்கல்வி முன்னேற்ற மடைந்திருப்பதால், அவண் அநேக பரோபகார கைங்கரியங்கள் பெண்களால் கைக்கொள்ளப்பட்டு அபிவிருத்தி யடைந்து வருகின்றன. அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் உள்ள அனாதை அக்ரமங்கள் அநேகம். எங்கு பார்ப்பினும் குழந்தைகளை வளர்க்குமிடங்களையும், வைத்தியசாலைகளையும் காணலாம். இவைகளில் வேலைசெய்வோர் பெரும் பான்மையாக பெண்மக்களே யாகும்.

இந்தியாவின் நிலைமையென்ன? குழந்தைகளை வளர்க்கும் ஸ்தாபனங்களும், சிறையிலுள்ள பெண் கைதிகளின் நிலைமையை யும், குறைகளையும் அறியவும், ஆஸ்பத்திரியில் நோயாளிகளைக் கவனிக்கவும், அனாதை ஆச்ரமங்களை ஸ்தாபிக்கவும், நம் நாட்டின் பெண்மணிகள் முன்வர வேண்டாமா? இவைகளை யெல்லாம் கவனிக்குமளவில், பெண்கல்வி மிக்க அவசியமென்பது புலனாகின்றதன்றோ.

'இந்திய மித்திரன்.'

விளம்பரஞ் செய்வோர்க்கொரு விசேஷச்செய்தி

இந்தியர்களின் குடியேற்ற நாடாகிய மலாயாவில் "இந்திய மித்திரன்" என்னும் பெயருடன் பிரதி புதன்கிழமை தோறும் இரண்டாயிரத்தி ஐநூற்றி லதிகம் பிரதிகளாக வெளியாவதும், முழு மலாயாவின் எல்லாப் பாகங்களில் மட்டுமன்றி, இந்தியா, பர்மா, சிலோன், சயாம், ஜாவா, சுமத்ரா முதலிய வெளிநாடுகளிலும் விசேஷமாகப் பரவி யுள்ளதும் மலாயாவிலிதற் கிணையில்லை யெனக் கொண்டாடும் கீர்த்திவாய்ந்ததுமாகிய சிறந்த தமிழ்ப்பத்திரிகையில் விளம்பரஞ் செய்வோரே தமது வியாபார விருத்தியை உண்மையிற் கோருவோர்களும், உத்தேச பலனைப் பூரணமாயடையத் தக்கோருமாவார்கள். சந்தாதார்களாகச் சேருவோர்க்கும் சிந்தைகளிக்கத்தக்க செய்திகளனந்த முண்டு. வெளியூர் வருடசந்தா ரூபாய் 7—8—0 விளம்பர விகிதங்களுக்குக் கீழ்க்காணும் விலாசத்திற் கெழுதவும்.

மானேஜர், "இந்திய மித்திரன்."

ஈப்போ. (எப். எம். எஸ்.)

"காங்கிரசுக்கு முன் நான் மிக அற்பன்."

மகாநாட்டில் மகாத்மாவின் வீரமொழிகள்.

பிரதம மந்திரி மிஸ்டர் மாக்டொனல்டின் வேண்டுகோளுக்கிணங்கி, வட்டமேசை மகாநாடு டிசம்பர் 1-ந் தேதி இரவு 11-45 மணிக்கு மறுபடியும் கூடியது. மந்திரிசபையில் இந்தியப் பிரச்சினையைப்பற்றி வெகுநேரம் விவாதித்த பின்னர், பிரதம மந்திரியார், காந்திஜீயின் சொற்பொழிவைக்கேட்குமாறு விரைவாகவந்து சேர்ந்தார்.

நடு இரவு 12—5 மணிக்கு, மகாத்மா தமது சொற்பெருக்கை ஆரம்பித்து சுமார் 70 நிமிஷநேரம் பேசினர். அவரது சொற்பொழிவு மேம்பாடு, கௌரவம், உறுதி, சாத்வீகம் முதலிய அம்சங்களோடு கூடியிருந்தது. சர்ஜனப் பிரதிநிதித்துவம், செல்வாக்கு, வண்மை, உறுதி முதலியவைகளோடு கூடிய காங்கிரஸ் மகாசபையுடன் ஒரு சமாதான முடிவுக்கு வரவேண்டிய அவசியத்தை வற்புறுத்தி அத்தகைய செல்வாக்குடைய காங்கிரசை மகாநாட்டுக்கு வரவழைத்து அதனிடம் அவநம்பிக்கைகொள்வது கூடாதென்றும் குறிப்பிட்டார்.

"சட்டமறுப் பியக்கத்தை எதிர்க்க முயலக்கூடிய காலம் மலையேறிவிட்டது. நாம் ஒத்துழைப்பை விட்டுப் பிரிந்துபோக வேண்டியகாலம் வந்துவிட்டது. கௌரவமானதோர் ராஜியை எற்பத்த முடியுமானல், அதற்காக எவ்வளவு பெருந்தியாகத்தைச் செய்வதையும் நான் பெரியதாய் நினைக்கமாட்டேன். இந்தியா உண்மையான சுதந்திரத்தைப் பெறவேண்டுமென்பதே காங்கிரஸின் ஆழ்ந்த உணர்ச்சி. அந்த உணர்ச்சியை நீங்கள் நன்ருக உணர்ந்துகொள்ளுமாறு நான் செய்துவிட இயன்ருல், சமரச ஆசை எவ்வளவு அதிகமாக எனக்கு எப்பொழுதும் இருந்து வருகின்றது என்பதை நீங்கள் காண்பீர்கள்."

"ஆனால், எதுவரையில் சுதந்திரத்தின் அர்த்தம் சம்பந்தப் பட்ட வரையில் ஒற்றுமையேற்படவில்லையோ அதுவரையில் சமரசம் என்பது அசாத்தியமாகும். 35 கோடி ஜனங்களைக் கொண்ட தேசத்திற்கு, கொலைஞனின் கோடாலி வேண்டிய தில்லை; நச்சுக்கோப்பை வேண்டியதில்லை; வாளும் ஈட்டியும் வேண்டியதில்லை; துப்பாக்கிக் குண்டும் வேண்டியதில்லை. அதற்கு வேண்டியது தன்னிச்சையான மனஉறுதிதான்; 'மாட்டேன்' என்று சொல்லும் திறமைதான் வேண்டும். அதைச்செய்ய இந்திய தேசம் கற்றுவருகிறது."

"காங்கிரஸின் சார்பாக நான் பதிவுசெய்து கொண்ட பாத்தியங்களில் ஒரு தினையளவும் நான் குறைத்துக்கொள்ளமாட்டேன்; சமஷ்டிக் கமிட்டியில் நான் பேசிய பேச்சுக்களிலிருந்து ஒரு வார்த்தையும் நான் வாபீஸ் பெற்றுக்கொள்ள மாட்டேன், என்றாலும், இங்கே நான் சமரசத்துக்குத் தயாராயிருக்கிறேன்; பிரிட்டிஷ்காரருக்கோ இந்தியருக்கோ உரிய உயர்ந்த சாமர்த்தியத்தினால் தயாரிக்கப்படக்கூடிய எந்த யோசனையையும் ஆலோசித்துப்பார்க்க நான் தயாரா யிருக்கிறேன். ஆனால், ஈசுவர சாட்சியாக உங்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன். 62-வயதாகிவிட்ட இந்தத் தள்ளாடும் கிழவனுக்குச் சிறிது சந்தர்ப்பங்கொடுங்கள். இந்தக் கிழவனுக்கும், அவன் எதற்குப் பிரதிநிதியா யிருக்கின்றானோ அந்த ஸ்தாபனத்துக்கும் ஓர் மூலையில் இடங்கொடுங்கள். என்னை நம்புவதாக மேலுக்குக் காண்பித்தாலும் அந்த ஸ்தாபனத்தினிடம் நீங்கள் அவநம்பிக்கைகொண்டுள்ளீர்கள். அந்த ஸ்தாபனத்தினும் நான் எவ்வளவோ அற்பமானவன். காங்கிரஸின்றும் பெறுவதைத் தவிர வேறெந்த அதிகாரமும் எனக்குக் கிடையாது.

"நான் சொல்லும் எதுவும் பிரிட்டிஷ் மந்திரி சபையின் தீர்மானத்தை மாற்றிவிடக் கூடுமென்று நான் எதிர்பார்க்கவில்லை. மந்திரிசபை அநேகமாக ஏற்கனவே தன் தீர்மானத்தைச் செய்திருக்கக் கூடும். உண்மையிலே ஓர் கண்டமாக விளங்கும் ஓர் நாடு முழுவதினுடைய சுதந்திரத்தை வாதங்

களாலோ ராஜிப் பேச்சுக்களாலோ முடிவு செய்துவிட முடியாது.

"மகாநாட்டுக்குச்சமர்ப்பிக்கப்பட்டயாதாஸ்துக்களில் பெரும்பாலானவற்றினின்றும் நான் மாறுபடுகின்றேன். அவ்வாறு நான் செய்யாவிட்டால், காங்கிரஸ் கட்சியை உண்மையாக எடுத்துச் சொல்லத்தவறியவனுவேன். சகலகாங்கிரஸ்வகுப்பினரதும்பிரதிநிதித்துவம்வாய்ந்ததாகும். வட்டமேஜைமகாநாடுசெய்யவேண்டியிருக்கும்வேலையை நோக்கும் பொழுது, காங்கிரஸும் பல கட்சிகளிலே ஒன்றுபோல மதிக்கப்பட்டிருப்பது ஓர் துரதிர்ஷ்டமாகும். காங்கிரஸே இந்தியாவின் பிரதிநிதியாகச் சமசரசம் செய்துகொள்ளும் சக்திவாய்ந்தது என்ற உண்மையைப் பிரிட்டிஷ் பொதுஜனங்களுக்கும் அரசாங்கத்திற்கும் திருப்திகரமாக நிரூபிக்க என்னல் இயலவேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். எனது பாத்தியம் ஒப்புக்கொள்ளப்படவேண்டும் என்பது அங்கீகரிக்கப்படுமானல், பெரும் வித்தியாசம் ஏற்படும்.

"சிறுபான்மை வகுப்புக்கள் யாவற்றுக்கும் பிரதிநிதியாக விளங்கக்கூடியது காங்கிரஸே என்று நான் பாத்தியங்கொண்டாடுகிறேன். அது போட்டி கவர்ன்மெண்டு ஒன்றை நடத்தியதாகக் குற்றம் சாற்றப்படுகிறது. ராஜாங்கத்தை எதிர்த்துப் புரட்சி செய்யும் உணர்ச்சி கொண்டது, காங்கிரஸ் என்று கூறப்படும் குற்றச்சாற்றை நான் ஆமோதிக்கிறேன். ஆனல், ராஜிப் பேச்சின் மூலமாக இங்கிலாந்து இணங்கிப் போகுமானல், பிரிட்டனுக்கு அது பெருமையே அளிக்கும்.

"இந்த உண்மையை நீங்கள் அங்கீகரிப்பீர்களேயானல், இடைஞ்சலான நிலைமைகளிலுங்கூடத் தன் கையிலே பலாத்கார சாதனமெதுவுமின்றியே போட்டி யாசாங்கமொன்றை நடத்தக்கூடியவோர் ஸ்தாபனத்தை, நீங்கள் சந்தோஷமாக வரவேற்பீர்கள். காங்கிர்ஸ் அழைக்கப்பட்டது; என்ருலும், இந்தியா முழுவதற்கும் பிரதிநிதியாகத்தான் இருந்துவருவதாக அது கொண்டாடும் பாத்தியம் ஒதுக்கித் தள்ளிவிடப்பட்டது. அதன் அந்தப் பாத்தியத்தை என்னல் இங்கே ருசுப்பிக்க முடியவில்லை; என்ரு

னும், என் மேல் ஓர் பிரம்மாண்டமான பொறுப்புச் சுமந்திருப்பதால், அதனை நான் இங்கே வற்புறுதிக் கூறுகின்றேன்.”

“இந்தியாவின் கோடிக்கணக்கான மனிதர்களையும் ஸ்திரீகளையும் குழந்தைகளையும் சட்டமறுப்பியக்கத்தின் கொடுஞ்சோதனையான துன்பத்திற்காளாக்காமல், கௌரவமானதோர் ராஜியைச் செய்துகொள்ள நான் என்னாலான, சகலமுயற்சிகளையும் செய்வேன். ஆனால், அவ்வாறே அதற்காகச் செய்யவேண்டி நேர்ந்தால், சந்தோஷத்துடனே அப்படியே செய்வேன். சமரசம் கௌரவமானதாகவும் சுதந்திரம் உண்மையாகவுமிருந்தால், நான் அதற்குத் தயாராயிருக்கிறேன். அதை நீங்கள் எந்தப் பெயரால் அழைப்பினும் சரியே. நான் வேண்டுவது உண்மையான சுதந்திரம். நான் நட்பையே வேண்டுகிறேன். இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் உள்ள உறவை முறித்துவிட வேண்டுமென்று நான் விரும்பவில்லை. ஆனால், அந்நட்புச் சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்டதாயிருக்கவேண்டும்.

“பாதுகாப்புக்கள் அளிக்கக் காங்கிரஸ் இசைந்திருக்கிறது, ஆனால், அவை இந்தியாவின் நலத்தை நாடியவையாயும், இங்கிலாந்தின் நலத்துக்குப் பாதகமில்லாதவையாயுமிருக்கவேண்டும். இந்தியாவினுடையவையாயிருந்தாலும் சரி, இங்கிலாந்தினுடையவையாயிருந்தாலும் சரி; நியாயத்துக்கு விரோதமான நலன்கள் ஒழியவேண்டும். பெருத்த அளவு ஒற்றுமை ஏற்பட்டிருக்கின்றதென்று திரு. ஜயகரும் ஸர். சாப்ரூவும் கூறியதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.”

ஆனால், உண்மையான விஷயத்தை நாம் இன்னும் பிடித்து நெருக்கவில்லை. என்னசெய்வதென்று தெரியாது. திக்குமுக்காடச் செய்யும் பிரச்சினைகள் இருக்கின்றன, வென்பதை நான் பூரணமாக உணர்கின்றேன். ஆனாலும், ஓர் பரிகாரத்தைக் காண முடியும் என்றே நான் நம்புகிறேன், சட்டமறுப்பை மறுபடியும் உயிர்ப்பிக்க வேண்டுமென்று நான் விரும்பவில்லை. தற்காலிக ராஜியை நிரந்த சமாதானமாக மாற்றிவிடவேண்டுமென்றே நான்

விரும்புகிறேன், என்னிடம் நீங்கள் நம்பிக்கை வைப்பீர்களானல், அது காங்கிரஸிடம் நம்பிக்கை வைப்பதேயாகும். அதுவே என்னினும் பெரியது. சிறுபான்மை வகுப்புக்களின் பிரச்சினைக்குப் பரிகாரம் இல்லையானல், இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கிடையாது. ஆனல்,பரிகாரம் காணமுடியாதென்று நான் சோர்ந்துபோகவில்லை. எதுவரையில் அந்நிய ஆட்சி இருந்து வருகின்றதோ அதுவரையில், அந்தப் பரிகாரமுங் கிடையாது. பிரிட்டிஷார் வருவதற்கு முந்திய காலத்தில் சிறுபான்மை வகுப்புக்களின் பிரச்சினை இருந்ததில்லை. இந்நாளிலும் கூட, கிராமங்களில் இந்துக்களும் முஸல்மான்களும் சமாதானமாகவே வாழ்கின்றனர்கள்."

"பிரஜைகளின் மூலாதார உரிமைகளைச் சுதேச மன்னர்கள் அனுமதிப்பார்களென நான் நம்புகிறேன். தங்கள் சமஸ்தானங்களில், ஜனப்பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்திக் கொள்ளுவார்களென்றும் நம்புகிறேன். இங்கே ஜார்ஜ் மன்னர் எவ்வாறிருக்கிறரோ அவ்வாறே அவர்களும் சட்டவரம்புக்குக் கட்டுப்பட்ட மன்னவர்களாக மாறவேண்டுமென்று நான் விரும்புகின்றேன். காங்கிரஸ் இஷ்டப்படி நடக்குமானல், எல்லைப்புர மாகாணத்துக்கு உடனே மாகாண சுய ஆட்சி வழங்கவேண்டுமென்று நான் விரும்புகின்றேன். எனக்கு நீங்கள் இடங்கொடுத்தால் எனது பூரண ஒத்துழைப்பையும் தர நான் விருப்பமாயிருக்கின்றேன். என்னிடம் காட்டிய மரியாதைக்காகவும், பொறுமைக்காகவும் பிரிட்டிஷ் பிரதிநிதிகளுக்கும் மற்ற எல்லாப் பிரதிநிதிகளுக்கும் வந்தனம் செலுத்துகிறேன். ஆயிரமாயிரக் கணக்கான நட்புக்கள் ஏற்பட்ட இன்ப ஞாபகங்களுடனே நான் திரும்பிச் செல்லுகிறேன்."

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும்
அறவிலை வாணிகன் ஆய் அல்லன்
பிறரும் சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன்று அவன் கைவண்மையே."

விகடத் துணுக்குகள்.

வயோதிகர்:— வைத்தியரே! எனக்கு உடம்புக்குஅசௌகர்ய மாயிருக்கிறது. கைநாடியைப்பார்த்து ஏதேனும் மருந்து கொடுங் கள்.

வைத்தியர்:— ஐயா! பெரியவரே! நீங்கள் மதுபானம் அதி கம் குடித்துவருவதாகத் தெரிகிறது. உடனே குடியை விலக்குங் கள். இல்லையேல் ஒருமாதத்திற்குள் உங்கள் முகமெலாம் வெளுத்து குழி விழுந்து விடும்.

வ:— சரிதான் உங்கள் மருந்து போதும். (மறுபடியும் ஒரு மாதம் கழித்து வைத்தியரிடம் வருகிறார்.)

வ:— ஓய்! வைத்தியரே தாங்கள் சொன்னதேபோல் முக மெங்கும் குழிகள் காணப்பட்டு வெளுத்தும்போய்விட்டதைய்யா. நீங்கள் நல்ல ஜோஸியர்தான். பிரத்யக்ஷத்தில் சொன்னது சொன்னதாக நடந்ததைய்யா. ஏனய்யா! சென்ற வருஷம் நம் ஊரில் திருட்டுப்போனதே அதைப்பற்றிக் கொஞ்சம் ஜோஸியம் சொல்லுங்களேன் பார்ப்போம்.

ஃ ஃ ஃ

கிழவி:— கமலம்! என்னடி நீங்களெல்லாம் வரவர கோண வகுப்பெடுத்துத் தலைவாரிக்கொள்ள ஆரம்பித்துவிட்டீர்கள். என்ன விந்தையடி பிந்தக்காலம்.

கமலம்:— பாட்டி! என்ன ஒன்றும் தெரியவில்லை உங்களு க்கு. பாருங்கள் நாங்களும் கோணல், எங்கள் நடத்தையும் கோ ணல், எங்கள் வகுப்பும் கோணல் இவ்வளவுதானே.

ஃ ஃ ஃ

உபாத்தியாயர்:— ராமா! இதோ மணியடிக்கிறதே இதற்குப் பெயர் என்ன?

ராமன்:— அது மணியடிக்கிற கடியாரம் சார்.

உபா:— சரி. அடே! கடியாரத்திற்கு இருப்பதைப்போல் எனக்கு என்னென்ன அவயங்களிருக்கின்றன. சொல்லு.

ராமன்:— உங்களுக்கு இரண்டு கைகளும் ஒருமுகமும் கடியாரத்திற் கிருப்பதுபோல் இருக்கின்றன சார்.

உ:— அப்படியா! இருக்கட்டும். கடியாரத்திற்கிருப்பது போல் எனக்கு என்ன இல்லை சொல்லு.

ராமன்:— சார்! உங்களுக்கு கெடியாரத்திற் கிருக்கும் ஸ்பிரிங்கிடையாது. மணியும் அடிக்காது.

ஃ ஃ ஃ

தாசி:— நாதா! தாங்கள் என்னை பிரிந்தது முதல் உறக்கம் கிடையாது, உணவுகிடையாது. என்ன செய்வது தங்களை ஒரு நிமிஷநேரமும் மறந்தறியேன். சதா கவலைதான். இதற்குத்தான் ஆடவர்கள்மீது பிரியம் வைக்கக்கூடாதென்கிறார்கள். என்னமோ! என் விதிப்பயன் இப்படியெல்லாம் கஷ்டப்படவேண்டியதாயிற்று.

மைனர்:— உண்மைதான். ஒருநிமிஷமும் என்னை மறந்திருக்க மாட்டாய் பொதுவாக தாசிகள், வீட்டுக்குவரும்பொழுதும் அழுதகண்ணீர் பிரியும் பொழுதும் அழுதகண்ணீர் என்பார்கள். நேற்று உன்னோடு கூடியிருந்த என் நன்பரிடமும் இப்படித்தான் கஷ்டப்பட்டாயாம்.

ஃ ஃ ஃ

ஒருவர்:— ஒட்டல் மானேஜரே! உங்கள் ஒட்டலில் தங்கியிருக்க வசதியான இடம் கிடைக்குமா?

ஒட்டல்மானேஜர்:— சார். இடம் கிடைக்கும். தங்கள் பெயர் சொல்லுங்கள்.

ஒருவர்:— ராஜ மார்த்தாண்டன், ராஜ மனோகரன் ராஜ சிம்மன், ராஜதந்திரன், ராஜ ராஜேந்திரன் என அழைப்பார்கள்.

ஒ:— ஐயா! இத்தனைபேர்களுக்கு இங்கு இடம் கிடையாது. போய்வாருங்கள்.

ஃ ஃ ஃ

கேதாரம்:— அடி! விசாலம்! உன்குழந்தை சும்மாயிருக்கிறதா? நன்ருகபேசக் கற்றுக்கொண்டதா?

விசாலம்:— அம்மா! நல்ல கேள்வி கேட்டீர்கள். போதும் என் குழந்தைக்கு இப்பொழுது பேசாமல் சும்மாயிருக்கக் கற்றுக்கொடுக்கிறேன்.

ஃ ஃ ஃ

வழிப்போக்கர்:— போலீஸ் உத்தியோகஸ்தரே! என் மோட்டார் வண்டியை இங்கு நிறுத்தியிருந்தேன். யாரோ கொண்டுபோய்விட்டார்கள்.

போலீஸ்காரர்:— ஐயா! உங்கள் வண்டி நெம்பர் என்ன? எப்பொழுது நிறுத்தினீர்கள்? எங்கிருந்து வருகிறீர்கள்.

வ;— சிறித்துக்கொண்டே. சார் என் மோட்டார்வண்டியை திருடமுடியாதவாறு இன்ஷியூர் செய்துவிட்டேன். உங்கள் உதவி தேவை இல்லையையா.

ஃ ஃ ஃ

நேமி:— சாமி! ஏனப்பா! உஷ்ணம் குளிரைவிட சீக்கிரத்தில் பரவுமாமே எப்படி?

சாமி:— அப்படித்தானப்பா. அதனுல் தான் நமக்கு சீக்கிரம் ஜலதோஷம் உண்டாகிறது.

ஃ ஃ ஃ

சாமா:— சோமா! என்னடா இவ்வளவு புத்திசாலியாயிருக்கிருய். சீக்கிரத்தில் உன் தலையை சீர்படுத்திக்கொள்ளடா.

சோமா:— சாமா! இதுதாஞ ஒரு பெரிய காரியம். நாளை மதராஸுக்குப் போகிறேன். அங்கு நவீன நாகரீகத்திற்கேற்ற நல்லதொரு குல்லாவை வாங்கித் தலையில் போட்டுக்கொள்ளுகிறேன். போருதோ.

மணியொலி.

காரைக்குடி மறியல் நிறுத்தப்பட்டுள்ளது.

காரைக்குடியில் இதுகாறும் பெருந்தொகை செலவில் நடைபெற்றுவந்த அந்நியத்துணி மறியல் தீபாவளிக்குப் பின்னர் நிறுத்திவைக்கப்பட்டிருப்பது கண்டு சிலர் பலவித சந்தேகங் கொள்ளுகின்றனர். நீண்டநாளாகத் தொண்டர்கள் ஓய்வின்றி மறியலை நடத்திவந்தார்கள் என்ற முறையில் அவர்களுக்குச் சிறிதுகாலமாகினும் ஓய்வுகொடுக்க வேண்டுவதவசியமாகையாலும் நமது நமது நாட்டில் தீபாவலிக்குப்பின்னர் ஒன்றி ரெண்டு மாதங்கள் வியாபாரிகளும் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வதில்லை, பொதுஜனங்களும் மிகுதியாக வாங்குவதில்லை, என்பது யாவரும் அறிந்ததே யாகையாலும் சிறிது காலம் மறியல் தற்காலீகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

பொ. திருகூடசுந்தரனுர்.

திருநெல்வேலியில் நமது காரைக்குடி ஜில்லா காங்கிரஸ் காரியதரிசி திருவாளர் திருகூடசுந்தரம் பிள்ளை அவர்களுக்கும் திருவளர்ச் செல்வி கமலாம்பாள் அவர்களுக்கும் திருநெல்வேலி சிந்து பூந்துறையில் சீர்திருத்தத் திரும்மணம் மிகச் சிறப்பாக நடைபெற்றதாகத் தெரிகிறது. இம்மணம் இப்பொழுது சீர்திருத்தக்காரர்களெனச் சொல்லி மணம் நடத்திவரும் சுயமரியாதைக் காரர்கள் மணம் நடத்துவதுபோலல்லாமல் உண்மையிலேயும் ஒழுங்கு முறையுடனேயும் நடைபெற்ற ஓர் சீர்திருத்தமணம் என்பதற்கு அம்மணத்தை நேரில் கண்டுகளித்தவர்கள் எவ்வித மறுப்பும் கூறமுடியாது. வீண் வாதம் செய்யாமலும் பிறரை ஏசுவதையே தொழிலாகக் கொள்ளாமலும் சீர்திருத்த மணம்இன்னதென்பதைத்தன்னளவில் செயலில்காட்டியதிரு. யவர்களை பிள்ளை நாம் பாராட்டுவதோடு இம்மண மக்கள் எல்லா நலனும் குறைவறப்

பெற்று மங்கள முடன் வாழ இறைவன் கிருபையை இறைஞ்சி ஏத்துகின்றோம்.

பாராட்டுகிறோம்.

பள்ளத்தூர் திருவாளர். அ. மு. மு. முரு முருகப்பசெட்டியாரவர்களும் கானாடுகாத்தான் திருவாளர். வெ. வீர. சுப்பையா செட்டியாரவர்களும் பர்மா நாட்டுக்கோட்டை நகரத்தார் அஸோசியேஷன் பிரதிநிதிகளாக வாஷிங்டன் மஹாநாட்டிற்குச் சென்றிருந்தவர்கள் அம்மஹாநாட்டில் கலந்துகொண்டு அங்கிருந்து சைனா, ஜப்பான், ஜர்மென், பிரான்சு, இங்கிலாந்து முதலிய பல இடங்கள் சென்று சௌகர்யமாகத் தாய்நாடு வந்துசேர்ந்தார்கள். அவர்கள் பிரயாணமும் சென்ற காரியமும் வெற்றிகரமாக நடந்தது கண்டு சந்தோஷிக்கிறோம். செட்டியார்களில் முதல் முதல் துணிகரமாக இவ்வளவு நாடு சுற்றியும் வெளிநாடுகளில் நடைபெறும் உலக மஹாநாடுகளில் கலந்துகொண்டும் தைரியமாக விளங்குபவர்கள் இவர்களே யாகையால் இவர்களை நாம் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறோம். இவர்கள் பிரயாணந் தொடங்கிய பின்னர், இவ்வடமிருந்து பிரயாணமான பள்ளத்தூர் அமு. மு. முரு. வெள்ளையஞ்செட்டியாரவர்களும், கொத்தமங்கலம் லெ. அருணசலஞ் செட்டியாரவர்களும் சைனா, ஜப்பான் முதலிய இடங்கள் சென்று சுற்றிப்பார்த்துவிட்டு இவர்களுடன் தாய்நாடு வந்து சேர்ந்தார்கள். இவர்களையும் பாராட்டுகிறோம். இவர்கள் யாவரும் இன்னும் பல இடங்களையுங் கண்டு நூதன வியாபார நிலையங்கள் நம் செட்டிமார் நாட்டில் உண்டாக ஏற்பாடுகள் செய்வார்களென எதிர்பார்க்கிறோம். அப்பொழுதுதான் அவர்களின் பிரயாணம் தங்கள் நாட்டிற்கு ஓர் பலன் தந்ததாகும்.

தீண்டாமை.

அகில இந்திய காங்கிரஸ் தீண்டாமை விலக்கு சப் கமிட்டியார், காங்கிரசும், இதர சங்கங்களும், தனிப்பட்டவர்களும், தீண்டாமையை ஒழிக்கும் விஷயத்தில் செய்துவரும் வேலையைப் பற்றி பொதுஜனங்களுக்கு அறிவிக்கும் பொருட்டு டிசம்பர் மாதம் 15-ந் தேதி யிலிருந்து மாதாந்திர அறிக்கை யொன்று வெளியிடப் போகின்றார்கள்.

நாற்றிசை நடப்பு.

ஆலயப்பிரவேச சத்தியாக்ரஹம்.

குருவாயூரில் ஆலயப்பிரவே சத்தியாக்ரஹப் போர் வெகு விமரிசையாக நடத்தப்பட்டுவருகிறது. தொண்டர்கள் முழுத் திறமையுடன் வேலைசெய்துவருகிறார்கள். ஊரிலுள்ள ஜனங்கள் சத்தியாக்ரஹப் போருக்கு வேண்டிய உதவிகளும் புரிவதாகத் தெரிகிறது. வேதங்களைக் கற்றுணர்ந்து பாண்டியத்தும் பெற்ற அபினவி விஷாஸ்பதி ராமேசம் அவர்களும் தொண்டர்கள் வேலையையும் ஆஸ்ரமத்தையும் பார்வையிட்டு மிகவும் பாராட்டுகிறாராம். மற்றும் ஹிந்துமதத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஆலயத்துள் பிரவேசிக்க உரிமையுண்டென்றும் எடுத்துரைத்தாராம்.

கோஷா நிலைதடுமாறியது.

பலநூற்றாண்டுகளாக திரைக்குள் (கோஷாக்களாக) அடைப்பட்டிருந்த பாரஸீக தேசத்து ஸ்திரீகள் இப்பொழுது முதன் முதல் நாடகமேடையில் நடிகர்களாகவும் பாடகர்களாகவும் வெளிக்கிளம்பிவிட்டனராம்.

அதிக வருமானம் பெறுவோர்.

பிரிட்டனில் வருஷத்திற்கு லக்ஷம் பவுன்களுக்குமேல்வரும்படியுள்ளோர் 130 பேர்கள் என்றும், எட்டாயிரம் முதல் பதினாயிரம் பவுன்கள் வரை வருமான முள்ளோர் 4154 பேர்கள் என்றும் தெரியவருகிறது.

தோல்வியுற்றது.

தொழிலாளர்கள் வாரத்தில் 40-மணி நேரம் வேலைசெய்ய வேண்டுமென்றும், அதற்குமேலுள்ள நேரம் குறைக்கப்பட

வேண்டுமென்றும், ஜினிவா சர்வதேச தொழிலாளர் சங்க காரியாலயத்தில் நிர்வாக சபைமுன் தொழிலாளர் பிரதிநிதி கொண்டுவந்த தீர்மானம் தோல்வியடைந்தது.

இந்தியர் அஸோஸியேஷன்.

பினங்கு இந்தியன் அஸோஸியேஷனில் இவ்வருஷத்திற்கு பாரிஸ்டர் கனம் N. ராகவன் அவர்களைத் தலைவராகவும், கனம் N. பொன்னுதுரை யவர்களைக் கௌரவ காரியதரிசியாகவும் நியமனம் செய்யப்பட்டிருக்கிறது,

பிரம்மச்சாரிகள்.

பிரஞ்சு தேசத்தில் மொத்தம் 13000,000 வயது வந்த ஆடவர்களிருக்கின்றார்களாம், அவர்களில் 4700,000 பேர்கள் விவாகமில்லாமலிருக்கின்றார்களாம்.

சட்டமறுப்பு ஆரம்பமாகுமா?

ராய்டர் நிருபவர் ஒருவர் மகாத்மாவைப் பேட்டிகண்டபோது அவர் கூறியதாவது: பிரதம மந்திரியின் அறிக்கையை முன்னிட்டு, நான் இந்தியாவுக்குத் திரும்பிச்சென்று, காங்கிரஸ் கமிட்டியாருடன் ஆலோசிக்கும் வரையில் சட்டமறுப்புப்போர் இந்தியாவில் ஆரம்பிக்கமாட்டாதென நம்புகிறேன். ஆனால் வங்காள அவசரச் சட்டம் உண்மையில் அமுலுக்குவந்தால் நிச்சயமாகச் சட்டமறுப்பியக்கம் இந்தியாவெங்கும் நடைபெறும்.

சர்ச்சில் தோல்வி.

காமன்ஸ் சபையில் சர்ச்சில் பிரேரணை ஓட்டுக்கு விடப்பட்டபோது 43 பேர்கள் பிரேரணைக்குச் சாதகமாகவும், 309 பேர்கள் பாதகமாகவும் ஓட்டுக் கொடுத்தனர்.

பெண்கள் வீரம்.

அடுப்பூதிக் காலங்கழித்துவந்த நம் இந்தியப் பெண்மணிகள் தற்சமயம் தொண்டர்படையில் சேர்ந்து தேசசேவைசெய்ய முன்

வந்திருக்கின்றனர். இவர்களுக்கு தேகப்பயிற்சி, முதலியன கற்பிக்கப் படுகிறது. இவர்கள் தேசதொண்டுக்குச் சிந்தும் கண்ணீர் எவ்வாறு முடிவுபெறுமோ தெரியவராது.

திருச்செந்தூர் ஆலயப்பிரவேச சத்தியாக்ரஹம்.

திருநெல்வேலி ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டியின் சாதாரனக் கூட்டமொன்று கூடியது. இவ்வருஷம் தமிழ்நாட்டு மாகாண மகாநாட்டை வரும் பிப்ரவரிமாதம் திருநெல்வேலியிலேயே கூட்டுவதெனக் கமிட்டி தீர்மானித்தது. திருசெந்தூர் ஆலயப் பிரவேச சத்தியாக்ஹத்தை ஆரம்பம்செய்வது பற்றி யோசனை செய்ய ஜில்லா மகாநாடொன்று கூட்டப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

வேலையில்லாத் திண்டாட்டம்.

யுனைடட் ஸ்டேட்ஸ் அமெரிக்காவில் தற்சமயம் 6200,000 பேர்கள் வேலையில்லாமலிருக்கின்றார்களாம்,

உள்நாட்டுத் தபால் கட்டன உயர்வு.

நாளது டிசம்பர் 15-ந் தேதி முதல் உயர்த்தப்பட்டுள்ள தபால் கட்டணங்கள் அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

கார்டுக்கு 0—0—9 ஸ்டாம்பு ஒட்டவேண்டும். கவருக்கு 0—1—3 ஸ்டாம்பு ஒட்டவேண்டும். தந்திமணியார்டருக்கு மட்டும் இப்போதிருக்கும் கட்டணத்தைவிட இரண்டணு அதிகம் சேர்த்துக் கட்டவேண்டும். கார்டுகளை எழுதி தலைஒட்டாமல் தபால் பெட்டியில் போடக்கூடாது. தலையில்லாத கார்டுகளைக் கிழித்தெரிந்து விடுவார்கள்.

சராசரி மக்கள் வயது.

பஞ்சாப் சட்டசபையில் கல்வி இலாகா மந்திரி திரு. நூன் வைளியிட்டதாவது. இந்தியாவிலுள்ள ஜனங்களின் சராசரி வயது 24—7 என்றும் ஆனல் பஞ்சாபில் மட்டும் 30—1 என்றும், இத்தாலியாவில் 49—3 என்றும் பிரான்ஸில் 22—5-ம் இங்லாந்தில் 55—6-ம் ஜெர்மனியில் 56 என்றும் வெளியிட்டிருக்கிறார்.

கவர்னர் விஜயம்.

சென்னைக் கவர்னர் வருகிற பிப்ரவரி மாதம் 10 தேதிக்கு மேல் இராமநாதபுரம் ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்வா ரென்றும், அதுசமயம், கானாடுகாத்தான், பள்ளத்தூர், காரைக் குடி, சிவகங்கை முதலிய யிடங்களுக்கும் வருவார்களென எதிர் பார்க்கப்படுகிறது.

காந்தியடிகளின் வருகை.

நாளது டிசம்பர் மாதம் 28-ந் தேதி மகாத்மாகாந்தி பம்பாய் வந்து சேருவார்கள். அன்றையதினம் தமிழ்நாடெங்கும் திருநா ளாகக் கொண்டாடவேண்டுமென்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அறிக்கையிட்டிருக்கிறது.

வங்களாச் சட்டம்.

பிரிட்டிஷ் மந்திரிசபையார், வங்காளச் சட்டத்திற்கு எதிர்ப்பு கள் தோன்றியிருப்பதைக் கண்டு, ஆச்சரியமுற்றிருப்பதாகத் தெரியவருகிறது.வங்காளச்சட்டத்தின் விதிகள்இப்பொழுதுதான் மந்திரிகளுக்குப் புலனாகின்றதாம். வங்காள கவர்ன்மெண்டாரும் இந்தியா கவர்ன்மெண்டாரும் வற்புறுத்திக்கேட்ட காரணமாகவே, மந்திரி சபையார் வங்காளச் சட்டத்திற் கிணங்கியிருக்க வேண்டு மென்று சில செய்திகள் கூறுகின்றன.

மோட்டார்வண்டி நிறுத்தம்.

பின்லெந்து தேசத்தில், பெட்ரோல், லூபிரிகேஷன் எண் ணெய் முதலியவைகளுக்கு கவர்ன்மெண்டார் ஏற்படுத்திய புதிய வரிக்காரணமாக மூன்றில் ஒருபங்கு மோட்டார் வண்டிகள் சும்மா யிருக்கின்றனவாம்.

சூரியன் தன்மை.

சூரியன் ஒரு நிமிஷத்தில் 37,000,000 டன் எடையுள்ள தண்ணீரை பூமியினின்றும் ஆவியாகக் கிரகிக்கிறதாம்.

மேஷின் மனிதன்.

மிஸ்டர். ஜே. எம். பென்னட் என்னும் இஞ்னீயர் மின்சார சத்தியால் ஒரு மெஷின் மனிதனைக் கண்டுபிடித்திருக்கிறாராம். அம்மனிதன், நடக்கவும், சொல்லும் வேலைகளைச்செய்யவும், பேச வும், சில பாட்டுக்களைப் பாடவும். முதலிய அரிய வேலைகளைச் செய்கிறானாம்.

நீங்கள் எலக்டிரிக் வயரிங் செய்ய விரும்புகிறீர்களா?

அப்படியானல் எங்களிடம் ஓர் முறை ஆர்டர் கொடுத்துப் பாருங்கள். குறைந்த கூலியில் உயர்ந்தமுறையில் வேலை செய்து தருவோம். எல்லாவகையான எலக்டிரிக் சாமான்களும் சப்ளை செய்யப்படும்.

T. R. ரெங்கசாமி.

பள்ளத்தூர்.

ராஜராஜேஸ்வரி ரக்ஷாபந்தனம்.

பூதப்பிரேத, பைசாச, ஏவல், பில்லிசூன்னியம், மாரண முதலிய நிவர்த்தியும், இஷ்டகாரிய சித்தியும், வாக்கு நன்மையும் பிரபு ஸ்நேக விஸ்வாசமும், தொழில் அபிவிர்த்தியும், சந்தான விருத்தியும், முதலியன சித்தியுறும்.

பாலர் ஸ்திரீகள் விருத்தர் யாவரும் அணியலாம். விலை ரூ. 3. வேண்டுவோர் முண்பணம் அனுப்பிப் பெற்றுகொள்ளவேண்டியது.

சித்தவைத்திய பற்பொடி.

நீண்டகால பல்வியாதிகளைப் போக்கும். எகிர்வீங்குதல், பல் சொத்தை விழுதல், கீழ்வடிதல், வாய்நாற்றம், முதலியவைகளை நீக்கி சுகத்தைக் கொடுப்பது இது வொன்றே. ஓர் முறை பரீக்ஷியுங்கள்.

டப்பி ஒன்றாக்கு விலை அணா 0-2-0 வி. பி. சார்சு வேறு

குகபதி.

சித்தவைத்தியம், மாந்திரீகம்.

நாட்டரசன்கோட்டை (இராமநாதபுரம் ஜில்லா.)

Regd. No. M. 2646.

மஹாதேவன் கம்பெனி,

மரச்சாமான்கள் வியாபாரம்,

கானாடுகாத்தான் (ராமநாதபுரம் ஜில்லா.)

உயர்ந்த சாமான்கள்! குறைந்த விலை!!

உங்கள் வீட்டை அலங்கரிப்பதற்கு,

எங்கள் கம்பெனியில் எல்லாவித மரச்சாமான்களும் வீடுகளின் உபயோகத்திற்கும் ஆபீஸ்களின் உபயோகத்திற்கும் உயர்ந்த பங்களாக்களை அலங்கரிப்பதற்கும் கலியாணச் சீர்களுக்கும் தகுதியான முறையில் உயர்ந்த சாமான்களைக்கொண்டு உறுதியாயும் வேலைப்பாடுகளுடனும் தேக்கு, தோதகத்தி முதலிய மரங்களில் செய்து வைத்துள்ளோம். விலை மிகக் குறைவு. தயாராக உள்ள தன்னியில் எவ்வித சாமான் வேண்டுமானாலும் மாதிரி காண்பிப்பின் குறித்தகாலத்தில் அதேமாதிரி செய்து கொடுக்கப்படும்.

ஓர் முறை வந்து எங்கள் கம்பெனியைப் பார்வையிடுங்கள்.

கம்பெனி வேலைக்கு உத்திரவாதம்.

Printed & ublished by S. RM. Ramanatha Mudaliar,
at Vedhambal Press, Pallatur. (RamnadDt.)